# மலர்ந்த ஜீவியம்

## ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

மே 2007 ஜீவியம் 13 மலர் 1

*இம்மாத மலரில். . . .*

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| இம்மாதச் செய்தி | 2 |
| எதையும் அசைக்கும் ஆன்மசக்தி | 3 |
| உலகம்-மோட்சம்-ஸ்ரீ அரவிந்தம் | 6 |
| அன்பர் கடிதம் | 17 |
| லைப் டிவைன் | 20 |
| சாவித்ரி | 26 |
| அமெரிக்காவின் முன்னேற்றத்திலிருந்து இந்தியர்களாகிய நாம் அறிந்து கொள்ள வேண்டியது | 28 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 36 |
| மலரும் மணமும் | 41 |
| அக வாழ்வு | 50 |
| யோக சக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள் | 56 |


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-

### ஜீவியத்தின் ஓசை

✡ நேரம் வரவேண்டாமா என்பது அன்பருக்கில்லை. மனம் காரியத்தை விட்டு நகர்ந்து ஆதாயத்தைக் கருதாமல் அன்னையை அன்புடன் அழைப்பது நேரம்.

✡ முடியாதுஎன்று உலகம் கை விட்ட எதையும் அன்னை மூலம் ஒரு முறை நிச்சயமாகச் செய்ய முடியும்.

✡ அன்னையிடமிருந்து நமக்குத் தொடர்ந்து நல்லது வந்து கொண்டிருந்தால் நமக்கு உடலளவில் நன்றியுள்ளதாக அர்த்தம்.

✡ உன்னையும் சேர்த்து எவரையும் நம்பாதே. மனிதனை நம்புவது அழிவிற்கு வழி வகுக்கும்.

## இம்மாதச் செய்தி

**புறம் அகமானால்**

**யுகம் க்ஷணமாகும்.**



# எதையும் அசைக்கும் ஆன்மசக்தி

என். அசோகன்

பிரச்சினைகள் என்றெழும்பொழுது, பலவற்றிற்குத் தீர்வு கிடைக்கும் பொழுது, சில தீராமல் நிற்கின்றன. தீர்வுஎன்பது நம்முடைய திறமை, அனுபவம், அடுத்தவர் உதவி, பணபலம், பதவிபலம் என்றிவற்றின்மூலம் வருவதோடு, இறுதியாகப் பிரார்த்தனையின்மூலமும் கிடைக்கின்றது. ஏதோவொரு வழியில் பிரச்சினை தீர்ந்தால் போதும்என்பது ஒரு மனநிலை. தீர்வுஎன்பது தம்முடைய முயற்சியால்மட்டும் வரவேண்டுமென்பது அடுத்த உயர்ந்த ஒரு மனநிலை. இத்தகைய மனநிலை நம்முடைய தனித்தன்மையை வளர்க்க உதவும். தீர்வு ஆன்மீக முறையில் வரவேண்டும்என்று நாம் நினைப்பது ஆன்மீகரீதியாக நாம் வளர உதவும்.

மேற்கண்ட ஒவ்வொரு முறையும் அதற்கென்ற தனிப்பட்ட வழியில் பிரச்சினையைத் தீர்க்கிறது. முன்யோசனைஎன்பது சிந்தனையைப் பயன்படுத்துகிறது. சமூக அந்தஸ்து மற்றும் பதவிப்பலமென்பது மற்றவர்களை நகர்த்துகிறது. பிரார்த்தனையின்மூலம் ஆன்மாவை நம் பிரச்சினையுடன் இணைக்கும்பொழுது ஆன்மா அமைதியாக அப்பிரச்சினையின்மேல் செயல்பட ஆரம்பிக்கின்றது. ஆன்மசக்தியை நாம் அணுகுகிறோம்என்றாலே நம் அறிவு இவ்விஷயத்தில் ஆன்மாவின் தலையீட்டை ஏற்கிறதுஎன்று அர்த்தமாகும். பொதுவாக, பிரச்சினைகள் என்றெழும்பொழுது சம்பந்தப்பட்டவர்களுக்கு ஆன்மாவின் நினைவு வருவதே இல்லை. அப்படிப்பட்டவர்களுக்கு உள்ளிருக்கும் ஆன்மாவுடன் தொடர்பே இல்லை என்று அர்த்தமாகும். ஆன்மாவின் ஞாபகம் வருவதே அவர்களுக்கு ஒரு முன்னேற்றமாகும்.

ஆன்மாவின் செயல்பாட்டிற்குண்டான பலன் தெரியும்பொழுது அது நாம் எதிர்பார்த்ததைவிடப் பல மடங்காக இருக்கும். பலன் கிடைக்கும் வழியும் சிரமமற்ற, சுலபமான வழியாகவிருக்கும். சிரமம் குறைவது

ஆன்மாவின் செயல்பாட்டின் அடையாளங்களில் ஒன்றாகும். ஆன்மா செயல்படும்பொழுது பல வருடங்களாக முடியாத வேலை சில மாதங்களிலும், சில நாட்களிலும்கூட முடிவதைக் காணலாம்.

நம் சொந்த முயற்சியால் ஒரு காரியம் முடிந்திருந்தால்கூட ஆன்மீக முறையில் அதைச் சாதித்திருந்தால் இன்னும் நல்லதாகவிருக்கும்என்று நாம் நினைக்கவேண்டும். ஆன்மா பிரச்சினையுடன் சம்பந்தப்படும்பொழுது, அது உடனே வாய்ப்பாக மாறுகிறது.

கோர்ட் விதித்த கைது உத்தரவிலிருந்து தப்பிக்க முதலமைச்சரின் ஆதரவை நாடினாரொருவர். நாளடைவில் முதலமைச்சருக்கு இவரை மிகவும் பிடித்துப்போக இறுதியில் நெருங்கிய நண்பரானார். அதாவது ஆபத்தால் வந்த அறிமுகம் நாளடைவில் நெருக்கமாகி, பெரிய பலமாக மாறியது.

பண்புமிக்க சூழலில் நுழைகின்ற பண்பற்ற மனிதர்கள், மற்ற பண்பு உள்ளவர்களுக்கு பிரச்சினை விளைவிக்கின்றார்கள். பொதுவாக இப்படிப்-பட்டவர்கள் உடனே வெளியேற்றப்படுவார்கள். அதன் பலனாக அடங்கிப் போவார்கள். உதாரணமாக ரிப்பேர் வேலைக்கு வரும் மெக்கானிக்குகள் சத்தம் போடுவதில்லை. பண்பான குடும்பச் சூழலுக்குள் நுழைந்த ஒரு மெக்கானிக் அங்கு கிடைத்த சுதந்திரத்தைப் பயன்படுத்திக் கொண்டு சத்தம் போட்டார். அவரை அடக்குவதுஎன்பது சுலபந்தான். இருந்தாலும் அடுத்தவருடைய சத்தம், நம்முடைய உள்மன அமைதி கெட்டிருப்பதற்கு அறிகுறியென்று எடுத்துக்கொண்டால், உள்ளே நாம் நம் மனநிலையைச் சரிசெய்யாதவரையிலும் யாரேனும் வந்து சத்தம் போட்டுக் கொண்டிருப்-பார்கள்.

உள்ளே நம் மனநிலையில் நிரந்தரமான அமைதியை நிலைநாட்டி விட்டால் அதன்பிறகு வெளியில் எவருக்கும் நம்மிடம் வந்து சத்தம்போடத் தோன்றாது. ஏனென்றால் பிரச்சினையின் மூலாதாரத்தை நம்முடைய சூழலிலிருந்தே நீக்கிவிடுகிறோம். அடுத்தவர் வந்து சத்தம் போடுவது என்பது அடிக்கடி எழுகின்ற பிரச்சினைஎன்பதுபோல இன்னும் பல



பிரச்சினைகளைப் பலபேர் அடிக்கடி சந்திக்கிறார்கள். இவர்களெல்லாம் மேற்கண்ட அணுகுமுறையைக் கையாண்டால் பிரச்சினை நிரந்தரமாகத் தீர்வதைக் காணலாம்.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

வேண்டியவர்மீதுள்ள நல்லெண்ணம், சுயநலமான நல்லெண்ணமாக இருக்கமுடியும். அனைவரிடமும் உள்ள நல்லெண்ணமே தன்னலமற்ற நல்லெண்ணமாகும்.

***தன்னலமற்ற நல்லெண்ணமே நல்லெண்ணம்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மனம் பிரம்மத்தை மேலும் அறிந்தால், உணர்வின் சிம்மசொப்பனமான பயம் மறையும்.

***பிரம்மம் பயத்தை அழிக்கும்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

அறிவால் ஒரு காரியம் பூர்த்தியாகிறது. ஒரு காரியம் செய்வதால் அறிவு ஏற்படுகிறது. அறிவும், செயலும் மனம் நிறையும் உணர்வை எழுப்ப முடியும். அறிவாளி, உணர்ச்சி வசப்பட்டவன், திறமைசாலிகள் என்பவர்கள் இந்நிலைகளை விளக்குபவர்கள். உன் நிலை எதுஎன்று கண்டுகொண்டால் அடுத்த கட்டத்திற்குப் போக என்ன வேண்டும்என்று புரியும்.

***அறிவு, உணர்வு, செயல், திறமை ஆகியவை மனித நிலைகள்.***

# உலகம்–மோட்சம்–ஸ்ரீ அரவிந்தம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## மனிதனின் ஆன்மீக இலட்சியம்

- சத்தியம்என்பது ஒன்று, அறிய முடியாதது. வேதாந்தம் சச்சிதானந்தத்தைக் கடந்து அசத் உண்டுஎனக் கண்டது.
- ஜடமோ, ஆன்மாவோ உண்மையாக இருக்க வேண்டுமானால், சிகரத்தையும் ஜடத்தையும் அறிய வேண்டும்.
- பிரம்மம், பிரபஞ்சம், ஜீவாத்மா ஆகியவை அவசியம். 'அது' மாறவில்லை. மாறுவது நம் கண்ணோட்டம்.
- பிரபஞ்சத்தைக் கடந்தது பாதாளம், மனிதன், பரமாத்மாவை சிருஷ்டித்தது. அகந்தை கூட்டைவிட்டு வெளியேறி அவற்றை அறிகிறது.
- எனவே ஜீவாத்மாவே சூட்சும இரகஸ்யம். தெய்வீக ஆன்மா இதர விடுதலை பெற்ற ஆன்மாக்களில் குட்டி போடுகிறது.

தாவரம், விலங்கு, மனிதன் குட்டிபோடப் பருவம் உண்டு. செடி வளர்ந்து, பூத்து, காய்த்து, பழுத்து, விதை பிடிக்கும். விதை அடுத்த மரத்தை உற்பத்தி செய்யும். விலங்கு வளர்ந்து, முதிர்ந்து, பருவம் எய்தினால் குட்டி போடும். மனிதன் 16 வயது, பெண் 14 அல்லது 15 வயதானால் பிள்ளை பிறக்கும். The child is an extension of the body. உடல் குழந்தையாக ஜனிக்க உடலுக்குரிய பருவம் 15 வயதளவில் வருகிறது. உடல் குட்டிபோடுவதுபோல் உயிரும் குட்டி போடும். வீரர்கள், கலைஞர்கள், தலைவர்கள் தங்கள் வீரம், கலை, தலைமை குழந்தைகளில் அல்லது சிஷ்யர்களில் எழுவதைக் காணலாம். மகாத்மா காந்தி 1920இல் இராஜாஜி தம்வாரிசு என்றார். நேரு வந்த பிறகு நேருவே தம் வாரிசு என்றார். தலைமை அடுத்த தலைமுறையில் வருவதுண்டு.



மாஸிடோனியா பிலிப் மகன் அலெக்ஸாண்டர் அப்படித் தலைமையைத் தகப்பனாரிடம் இருந்து பெற்றவன். மனம் அறிவை உற்பத்தி செய்தால், ஞானத்திற்கும் வாரிசுண்டு. ராமகிருஷ்ண பரமஹம்சருக்கு விவேகானந்தர் அப்படி வாரிசாக அமைந்தார். ஆத்மாவுக்குரிய வாரிசும் உண்டு. **ஆத்மாவின் வாரிசு சூட்சும உலகில் எழும்.** அவர் குடும்பத்தில் அது எழவேண்டும்என்ற நிர்ப்பந்தமில்லை. மோட்சம்பெற்ற ஆத்மா முதிர்ச்சி பெற்றது. தெய்வீக ஆன்மா உலகில் ஜனிக்கக் காத்துள்ளது. அது எந்த ஆத்மா மோட்சத் தகுதி பெறுகிறதுஎனக் காத்துள்ளது.

- தெய்வீக ஆன்மா மோட்சம் பெற்ற ஆன்மாவில் ஜனிக்கும்.
- இதே காரணத்தால் ஓர் ஆன்மா சித்தி பெறும் நேரம் பல ஆன்மாக்கள் சித்தி பெறுவதை உலகம் உணர்ந்து உள்ளது.

- ஆதியிலிருந்த ஐக்கியத்தை மீண்டும் பெறுவது மனிதனின் கடமை.

## பிரபஞ்சமும் மனிதனும்

- விஷ்ணு மனிதன் அதிகபட்சம் எட்டிய இலட்சியம். சத் தன்னை ரூபத்தில் சித்தித்து ஜீவாத்மாவில் வெளிப்படுத்துவது விஷ்ணு எனப்படும்.
- மனம், உயிர், உடலில் (ஜீவாத்மாவின் பகுதிகளில்) அனந்தம் சிருஷ்டியாக வெளிப்பட உதவுவது விஷ்ணு.
- பிரபஞ்சம் செறிந்து, அச்செறிவின் மூலம் பிரம்மத்தையடைய முயல்வதற்காக ஜீவாத்மா ஏற்பட்டது.
- ஜீவாத்மா பிரபஞ்சத்தின் மூலமே பிரம்மத்தைச் சித்திக்க முடியும்.
- ஜீவாத்மா வாழ்வில் ஆன்மாவைச் சித்திக்கப் பயன்படுவது மனோமயப் புருஷன்.
- தெய்வீக வாழ்வையடைய மனோமயப் புருஷனைக் கடந்த புருஷன் தேவை.

– மேல்மனத்தை ஊடுருவி உள்ளே போனால் அசத் அதற்கு விடை தரும். அசத் சச்சிதானந்தத்தைவிடப் பெரியது.

## அகந்தை

– ஜீவாத்மா பிரபஞ்ச ஆத்மாவானால் அகந்தையிலிருந்து தப்பலாம்.

உடலின் ஜீவியத்துள் ஆன்மா வெளிப்படுவது அகந்தை அழிய உதவும்.

– மரணம் என்பது மாற்றம்என உயர்ந்த ஜீவியம் அறியும்.

– பூமி சூரியனைச் சுற்றி வருவதை நம் புலன்கள்காண பிரபஞ்சமும், பிரம்மமும் சித்திக்க வேண்டும்.

– பகுத்தறிவு மூலம் நம்முள் பிரம்மம் வர முடியும்.

– சுயநலமாக நாம் செயல்பட மறுத்தால் சுயமான ஆனந்தம் நமக்கு அனுபவமாகும்.

சுய ஆனந்தம் எனில் என்ன?

ஆனந்தம் புறத்திலிருந்தும், அகத்திலிருந்தும் எழும்.

வசதி, விருந்து, உடை, பதவி, பிரபலம் தருவது ஆனந்தம் புறத்திலிருந்து எழுவது.

அறிவு, திறமை, நாணயம், நிதானம் ஆகியவற்றிலிருந்து எழுவது அகம் தரும் ஆனந்தம்.

**இவை அகம் தந்தாலும், இவை நம் புறச்செயல்களால் அகத்தில் சேகரிக்கப்பட்டவை.**

சுயம்என்பது இவற்றைக் கடந்த ஆத்மாவிலிருந்து எழுவது. அது பிரம்மம் நம்முள் உறையுமிடம்.

அந்த ஆனந்தம் இனம் புரியாத இன்பம் எனப்படும் causeless joy.

அது ஆத்மானந்தம், பிரம்மானந்தம்.



அதுவும் bliss அல்லது delightஆக இருக்கலாம்.

வளராத ஆத்மா எழுப்பும் ஆனந்தம் bliss. அது பகுதியானது.

வளரும் ஆன்மா எழுப்பும் ஆனந்தம் delight. அது முழுமையானது.

இது சுய ஆனந்தம்.

சுய ஆனந்தம் எழ சுயநலம் (selfishness) இருக்கக் கூடாது.

சுயநலம் அகந்தையிலிருந்து எழுவது.

சுய ஆனந்தம் எழ சுயநலமான அகந்தை அகன்று அழிய வேண்டும்.

– இயற்கை ஜீவனில் அனந்தம் மலரக் காத்துள்ளது.

## வேதாந்த ஞானம்

– அறிவு புலனைக் கடந்தால் பாதாளத்தின் ஞானத்தையும், பரமாத்மா ஞானத்தையும் இணைக்கவல்லது.

– வேதாந்தம் பிரம்ம ஞானத்தின் மூலம் பிரபஞ்சத்தை அறிய முயல்கிறது.

– ‘அது’ ஞானத்தால் உள்ளே அறியப்படுவது.

– வேதாந்தம் ‘சோஹம்’, ‘அஹம்பிரம்மாஸி’, ‘சர்வம் பிரம்மம்’ என்பவற்றை அறியும்.

## சத் புருஷன்

– வாழ்வுஎன்பது சக்தி. இதைக் கடந்த நிலையுண்டுஎன அறிவு கூறுகிறது. அது இடத்தையும், காலத்தையும் கடந்தது.

– கடந்தது பிரம்மம்.

– வாழ்வு என்பது சலனம். சலனம் காலம், இடம், இரண்டும் உண்மை. நித்தியம் சத்தியம். சலனத்தால் ஏற்படும் காலம் பிரம்மம். பிரகிருதிஎன்பது புருஷன்.

– ‘அது’ நம்முள் உள்ளது. நாம் அதனுள் சென்று நிலையாக வாழலாம்.

- ஞானம் பிரகிருதியிலுறைந்தால் காலம் உற்பத்தியாகிறது.
- சத்புருஷன், பிரபஞ்ச வாழ்வு என்பவை ஜீவனுடைய சத்தியம், பிரகிருதியின் உண்மை. அவை அடிப்படையான உண்மைகள்.
- இவையிரண்டிற்கும் உள்ள தொடர்பை அறிவது விவேகம்.
- நிலை, சலனம், ஐக்கியம், பன்மை என்பவை மனம் கற்பித்த உண்மை. பிரம்மம் இவற்றைக் கடந்தது.
- சத் என்னஎன அறிவோம். சக்தி என்பதென்ன?
- சத், சக்தி வெவ்வேறானவையா? சக்தி சத்தினுடைய வெளிப்–பாடா என்பது முக்கியக் கேள்வி.

## சித்–சக்தி

- வாழ்வின் தோற்றங்களை ஆராய்ந்தால், அவை சக்தியாகவும், ரூபமாகவும் முடியும்.
- உலகை நிர்மாணிக்கும்சக்தி விழிப்பான சக்தி. அச்சக்தியில் வெளிப்படும் சக்தி விழிப்பான ஜீவன். சிறப்பான ரூபம் இலட்சியம்.

## ஆனந்தம்

- பிரம்மம் மேலும் ஓர் ஆனந்தத்தை நாடுகிறது.
- தீமை, வேதனை என்பவை தார்மீகக் கருத்துகள். அதில் உண்மையில்லை.
- வாழ்வு தர்மத்திற்குக் கட்டுப்பட்டதன்று. மனிதன் தர்மத்திற்குக் கட்டுப்பட்டவன்.

  நாம் வாழ்வுஎன அறிவது ஊர், உலகம் வாழும் வாழ்வு.

  தத்துவம் வாழ்வுஎனக் கூறுவது மனம், வாழ்வு, உடல் வரிசைக்குரியது.

  இதன் முழு வரிசை சத் - சித் - ஆனந்தம் - சத்தியஜீவியம் -



மனம் - வாழ்வு - உடல். வாழ்வு Life என்ற அத்தியாயத்தில் இது விளக்கப்படுகிறது.

மனம் ஞானம், உறுதி என்ற இருபகுதிகள் உடையது.

ஞானத்திற்குத் திறனில்லை. உறுதிக்கு ஞானமில்லை.

பரிணாம வளர்ச்சியை நாம் மேல் நோக்கிப் போவதாக அறிவோம்.

மனம் சிருஷ்டியில் அடுத்த கட்ட வாழ்வாகும்.

மனம் வாழ்வாக மாற ஞானம் உறுதிமேல் செயல்படும், உறுதியைத் தாக்கும். உறுதிக்கு அறிவு தரும்.

உறுதி வலிமை வாய்ந்த இருள். ஞானம் ஒளி பொருந்தியது.

உறுதி ஞானத்தை ஏற்றால் உற்சாகமான சக்தி பிறக்கும்.

**உலகத்தின் ஞானம், உலகத்தின் உறுதியை செயல்படுத்தினால் உலகம் சக்திபெறும். அதை வாழ்வு, life என்கிறோம்.**

நாம் இன்றறிந்த உலகமும், பிரபஞ்சமும் அழிந்தால் அவ்வாழ்வு இருக்கும்என பகவான் கூறுகிறார்.

இந்த வாழ்வின் பகுதிகள் மூன்று.

மனிதன் இடைப்பட்டவன்.

விலங்கும் தாவரமும் கீழ்ப்பட்டவை.

கந்தர்வர்கள், மோகினி, தெய்வம் மனிதனுக்கு மேற்பட்டவை.

மனிதனுக்கு நல்லது, கெட்டது உண்டு; பாவம், புண்ணியம் உண்டு; தர்மத்திற்கு அவன் கட்டுப்பட்டவன்.

விலங்குக்குப் பாவமில்லை, நல்லதில்லை, புண்ணியமில்லை.

தெய்வம், கந்தர்வர்கள் ஆகியோருக்குப் பாவ, புண்ணியம், நல்லது, கெட்டது என்ற தர்மமில்லை.

மனிதன் மட்டுமே தர்மத்திற்குக் கட்டுப்பட்டவன்.

இந்த யோகம் மனிதனுக்குரியதன்று, இறைவனுக்குரியது.

அதனால் மனிதனுக்கு மட்டுமே உரிய தர்மம் இந்த யோகத்தைக் கட்டுப்படுத்தாது.

- மனிதனுடைய பரிணாம வளர்ச்சியில் தர்மம் ஒருகட்டம்.
- பாதாளமும், பரமாத்மாவும் தர்மத்திற்குக் கட்டுப்பட்டனவில்லை என்பதால், இவை இரண்டுடன் மனிதனுக்கும் பொதுவானது எதுஎனக் காண்போம்.
- ஜீவனின் ஆனந்தம் பிரகிருதியின் ஆனந்தமாவதே மூன்றிற்கும் பொது.
- பிரபஞ்சத்தை ஜீவாத்மாவில் சச்சிதானந்தம் காண முயலும் பொழுது இதையே செய்கிறது.
- பொருள்களில், பொருள்களைக் கடந்த ஆனந்தத்தைக் காண சச்சிதானந்தம் முயல்கிறது.
- மனிதன் ஆனந்தத்தை மறந்து பொருளை நாடி வலியை அனுபவிக்கிறான்.
- சுதந்திரமான மனிதனின் ஆனந்தம் பொருள்களில் பிரதிபலிக்கிறது.

  சிறைப்பட்ட மனிதன் ஆனந்தத்திற்காகப் பொருள்களை நாடி ஏமாறுகிறான்.
- சத்புருஷனுக்கு உலகம் மாயை.

  உலகம் தோற்றம்.
- மாயை, பிரகிருதி, லீலை.

  அவனே லீலை, அவனே ஆடுபவன், அவனே அரங்கம்.
- சிருஷ்டியின் இரகஸ்ய மூலம்:

  **சலனமற்ற ஆனந்தம் ஆனந்தச் சலனமாவது.**
- நாம் முழு ஜீவியம், முழு ஆனந்தம், உலகம் நம்மைப் ஸ்பர்சிக்கும் பொழுது அதை வேதனையால் வரவேற்கும் நிர்ப்பந்தமில்லை.



- எல்லாப் பகுதிகளிலும் விடுதலை பெற்றபின் முழு விடுதலை கிடைக்கும்.
- ஜீவாத்மா பிரபஞ்ச ஆத்மாவாகும் பொழுது வலி ஆனந்தமாக நேரடியாக மாறும்.

## தெய்வீக மாயை

- நாம் சத்தியத்தை அறிவோம். சத்தியம் எப்படி உலகமாகிறது என அறியோம்.
- அசைவற்ற சத்தியம் உலகத்தின் அசைவான சத்தியமாக மாயையால் மாற்றப் படுகிறது.
- லீலை நடக்க எல்லாம் ஒன்றிலும், ஒன்று எல்லாவற்றுள்ளும் இருக்கும்படி மாறவேண்டும். எல்லாம் எல்லாவற்றுள்ளுமிருப்பது லீலைக்குதவாது.
- மனம் சத்தியத்தைக் காணமுடியாதபடி தடுக்கிறது.
- யதார்த்தம், இலட்சியம் இரண்டும் உலகம் அறிந்தது. பகவான் சொல்வது அவற்றைக் கடந்தது.
- மனம் பிரபஞ்சத்தை விளக்கிக் கூற முடியாது. அதைச் செய்ய அனந்த ஜீவியம் அனந்தமான மனமாக வேண்டும். அதுவே சத்தியஜீவியம்.
- அறிவைப் பயன்படுத்தாவிட்டால், ஞானம் கொலுவீற்றிருப்பதைக் காணலாம்.

## சத்தியஜீவியம் – சிருஷ்டி கர்த்தா

- தெய்வம் பிறந்தது சத்தியஜீவிய லோகத்தில்.

  இங்கு ஞானமும், உறுதியும் இணைந்து செயல்படுகின்றன.

  இதற்கு இருபகுதிகள் உண்டு. மரபில் அவற்றை ஹிரண்ய கர்ப்பம்எனவும் பிரக்ஞாஎனவும் கூறுவர். பகவான் அவற்றை

  1) God காலத்தைக் கடந்த சத்தியஜீவியம்.

2) உலகம் காலத்தில் சத்தியஜீவியம் என்றழைக்கிறார்.

- சத்தியஜீவியம் பிரம்மத்தின் பரந்த வெளிப்பாடு.

  ஐக்கியத்தினின்று எண்ணத்தால் (Real-Idea) சத்தியஜீவியம் உலகை சிருஷ்டிக்கிறது.

- இயற்கை (பிரகிருதி) என்பது சத்புருஷன் செய்த முடிவின் பலன். ஆதியில் தன்னிடையேயுள்ள சத்தியத்தை சத்புருஷன் சக்தியாகவும், ரூபமாகவும் மாற்றுவது சிருஷ்டி.

- எண்ணம்என்பது ஜீவனுடைய (vibration) கதிரான எழுச்சி.

- சத்தியஜீவியம் ஐக்கியத்தில் ஆரம்பிக்கிறது, பிரிவினையில் இல்லை.

## உயர்ந்த சத்தியஜீவியம்

- தெய்வீக ஜீவியத்தின் பொதுவான சத்தியம் மனம்எனும் லோகத்தில் வெளிப்படுவது சத்தியஜீவியம்.

  (மனத்தில் ஆத்மா உண்டு. அது ஆன்மீகமாக வெளிப்படுவது மௌனம், சாந்தி, ஜோதியாகத் தெரிகிறது. ஆத்மா மனத்திலும் வெளிப்படும் (Psychological truth). பொய் சொல்ல மறுப்பது ஆன்மா மனத்தில் வெளிப்படுவதாகும். அதேபோல் தெய்வீக ஜீவியம் (Psychological truth) மனத்தில் வெளிப்படுகிறது. அது சத்தியஜீவியம்.)

- காலமும், இடமுமில்லாமல் உலகம் முன்னேற முடியாது. காலம் கற்பனையில் உருவாக்குவதை இடம் பொருளாக மாற்றுகிறது.

  அகத்தின் வாய்ப்பைப் புறம் வெளிப்படுத்துவது அபிவிருத்தி, முன்னேற்றம்.

  பிரபஞ்சம் சத்தியஜீவியத்தின் ஞானதிருஷ்டி.

  ஞானி, ஞானம், ஞானத்தால் அறியப்படுவதுஎன்ற பேதம் இங்கில்லை.

- பிரம்மம் அனைத்திலும் உண்டு. அனைத்தும் பிரம்மத்தி–



லுண்டு. அனைத்தும் பிரம்மம்என்பது சத்தியஜீவியச் சூத்திரம்.

- ஞானி, ஞானம், ஞானம் அறியும் பொருள்என்ற பிரிவினை அடுத்த கட்டத்தில் உற்பத்தியாகிறது. அது தொடர்ந்தால் அஞ்ஞானமாகும்.

  சிருஷ்டியில் அனைத்தும் முழுமையாக இருந்து பின் பிரிந்தது. கடவுள், இறைவன், ஜீவியம்எனப் பலவாறு நாம் கூறுவது ஒன்றே. ஒன்று ஒன்றாக இருந்தால் லீலையில்லை. இரண்டாகப் பிரிந்தால், பலவானால் ஒன்றுடன் மற்றது உறவாடும். **அது லீலை.** Consciousness ஜீவியம்என்பது ஆரம்பத்தில் ஒன்றே. சமுத்திரம் என்றனர் வேதரிஷிகள். ஒன்று பலவாகப் பிரிவது சிருஷ்டி. பலவாகப் பிரிவதின் பாங்கு பல. அவற்றுள் ஒன்று ஞானி, ஞானம், ஞானம் அறிவது. நான் உட்கார்ந்துள்ளேன். எதிரில் என் மகன் இருக்கிறான். நான் அவனை என் மகன்என அறிவேன். அறிபவன் ஞானி, அறிவு ஞானம், அறியப்படுவது எதிரில் உள்ள பொருள். இவை மூன்றாகத் தெரிவது நம் வாழ்வு. **இவை மூன்றல்ல, ஒன்றே.** அதையே ஆடுபவன், ஆட்டம், அரங்கம் என்கிறோம். இப்பிரிவால் சிருஷ்டி, லீலை ஏற்படுகிறது. லீலைக்காக ஒன்றானது பலவாகத் தோன்றுகிறது. பலஎனப் பிரித்துவிட்டால் ஒன்றுஎன்ற உண்மை போய்விடும். மகன் திருமணம் செய்து தனிக்குடும்பம் வைத்தாலும் அதுவும் என்குடும்பமே. வேறு குடும்பம்என நினைத்துவிட்டால் இல்லாத பிரிவினைக்கு உயிர் வரும். அப்படிப் பிரிப்பது அஞ்ஞானம். முதலாளி தான் வேறு, கம்பனி வேறுஎன நினைத்தால், அது எப்படியிருக்கும்?

- கடவுள், ஜீவாத்மா, அகந்தைஎன்ற மூன்று நிலைகளை சத்தியஜீவியம் ஏற்கிறது.

## தெய்வீக ஆன்மா

- தெய்வீக வாழ்வு உண்டானால் தெய்வீக ஆன்மா இருக்க வேண்டும்.

- இது முழுமையுடையதுஎன்பதால் கீழ் லோகத்தையோ, மேல் லோகத்தையோ விலக்க முடியாது. அதனால் அவ்விரு லோகங்களிலும் தெய்வீக ஆன்மா இருக்க முடியாது.

சச்சிதானந்தம் மேல் லோகத்திற்குரியதானதால் அங்கும் இருக்க முடியாது. அக்ஷரப் பிரம்மம் உள்ள சச்சிதானந்தம் மேல் லோகத்திற்கு மட்டும் உரியது. பகவான் கண்டது முழுப் பிரம்மம். இது க்ஷர, அக்ஷரப் பிரம்மம் இரண்டையும் உட்கொண்டது. மேலும் ஓர் அம்சமுடையது. இது வளரும் ஆன்மா உறையும் சச்சிதானந்தம். இதனுள் மேல் லோகமும், கீழ் லோகமும் உண்டு.

• **தெய்வீக ஆன்மா சச்சிதானந்த லீலையுள் உள்ளது.**

*தொடரும்....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

உலகப் போரைத் தடுக்கும் சூட்சுமச் சாதனமாக அன்னை ஆரோவில் நகரத்தை நிர்மாணித்தார். நம் வாழ்வின் துர்அதிர்ஷ்டங்களைத் தடுக்க, நாமும் அதுபோல் ஒரு சாதனத்தைத் தேடலாம். புதிய வாய்ப்பை ஏற்படுத்தும் சாதனங்களையும் ஏற்படுத்தலாம்.

***போரைத் தடுக்கும் சமாதான நகர்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஸ்ரீ அரவிந்தருடைய யோகம் அறிவுக்கேற்றதுஎன்பதால் அதற்குப் பலனுண்டு; உணர்வில் சந்தோஷமுண்டு; பகுத்தறிவுக்குப் பொருத்தமானது; சாந்தியும் மௌனமும் சேர்க்கவல்லது.

***பகுத்தறிவுக்கு ஏற்றவாறு பலனும் சாந்தியும் தரவல்லது ஸ்ரீ அரவிந்தம்.***



# அன்பர் கடிதம்

## 1989 முதல் 2005வரை அன்னையை ஏற்றுக்கொண்டது முதல் நடந்த நிகழ்ச்சிகள்:

1. 1989ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் என்னுடைய சகோதரன்மூலமாக அன்னையை அறிந்துகொண்டேன். உனக்குத் தேவையானது எதுவோ, அதை அன்னையிடம் கேள் என்றார். நான் அன்னையிடம் உங்களுடைய புத்தகம் என்வீடு தேடி வரவேண்டும்என்று மானசீகமாக வேண்டினேன். உடனே என்ன ஆச்சரியம் அண்ணன் நண்பன்மூலம் புத்தகம் வீடு தேடி வந்தது.
2. 1990ஆம் ஆண்டு குடியிருக்கும் வீட்டில் பல பிரச்சினைகளும் வதந்திகளும் இருந்தன. நான் அன்னையிடம் பிரார்த்தனை செய்தேன். அன்னை ஒயிட் நிற உடை அணிந்து, “நான் இருக்கிறேன். கவலையின்றி உன் குழந்தைகளுடன் நிம்மதியாக உறங்கு” என்றார். மிகவும் ஆனந்தப் பரவசமடைந்தேன்.
3. 1994ஆம் ஆண்டு: ஜனவரி 1ஆம் தேதி பாண்டிக்குச் செல்வது வழக்கம். எனது தீராத வயிற்றுவலி குணமடையவேண்டும்என சமர்ப்பணம் செய்தேன். நான் ஹாஸ்பிடலில் அட்மிட் செய்யப்பட்டு இருந்தேன். அங்கு ஸ்கேன் எடுத்து பார்த்ததில் “வயிற்றில் கட்டி முற்றிவிட்டிருக்கிறது. அது ஆப்பரேஷன் செய்யும்போது வெடித்துவிட்டால் உயிருக்கு ஆபத்து” என்று கூறினர். நான் அன்னையிடம், “பரிபூரணமாக நான் குணமடைந்து என் 3 பிள்ளைகளுக்காக (குழந்தைகள்) வாழவேண்டும்” என்று பிரார்த்தனை செய்தேன். ஆப்பரேஷன் செய்து கட்டியை அகற்றியபின் சில வினாடிகள் கழித்து கட்டி வெடித்தது. பிறகு நான் மயக்கநிலையில் இருக்கும்போதும் வலி அதிகமாக இருந்தது. அப்போது நான் அன்னையிடம் “என் வலி நீங்கவேண்டும்” என்று வேண்டினேன். வெண்ணிற ஜோதி ஒன்று கண்ணிற்குத் தெரிந்தது. அதைப் பார்த்தவுடன் உடல் வலி குறைந்தது. நான் ஆப்பரேஷன் தியேட்டருக்குள் செல்லும் போது அன்னையின் சிம்பல் கொண்ட மோதிரம் அணிந்திருந்தேன். அதனால்தான் ஆப்பரேஷன் சக்ஸஸ் ஆயிற்று.

4. 1995ஆம் ஆண்டு கடன் தொல்லையால் என் கணவர் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். என்கணவருக்கு செட்டில்மெண்ட் செய்யும் பணம் வேலை செய்யும் இடத்தில் முதலிலேயே கிடைக்கப்பெற்றது. அதன்மூலம் கடன் பிரச்சினை நீங்கியது.

5. 1996ஆம் ஆண்டு ராணிப்பேட்டையில் அன்னையின் அருளால் சொந்த வீடு வாங்கி குடி சென்றோம். அந்த இடத்தில் பக்கத்து வீட்டுக்காரன் தொல்லை தாங்கமுடியவில்லை. அப்போதுதான் இராணிப்பேட்டை தியான மையத்தில் நடந்த சொற்பொழிவு கேட்டு அதன்படி நடக்க முற்பட்டேன். அவன் அட்டகாசம் தாங்கமுடியவில்லை. நாங்கள் வீட்டை விற்கவும் முடியவில்லை. அன்னையின் சொல்படி நடந்துகொண்டோம். அவனுக்கு ஆக்ஸிடெண்ட் ஆனது. அவன் அப்போதும் திருந்தவில்லை. அந்த ஊரில் உள்ளவர்களின் சப்போர்ட்டுடன் அந்த இடத்தை அபகரிக்க முயன்றான். துர்அதிர்ஷ்டத்தில்தான் அன்னையின் பேரதிர்ஷ்டம் உள்ளதுஎன்று அன்பர் கூறியதுபோல அவனே அவன் செய்த தவறுகளை எண்ணி வெட்கித் தலைகுனிய ஆரம்பித்தான். அவன் எங்கள் வீட்டில் உள்ள அனைவருக்கும் செய்த தொல்லைகள் மற்றும் செய்வினைகள் பலிக்கவில்லை. காரணம் அன்னையின் அருள்என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. நாங்கள் அங்கு உயிருடன் இருப்பதும் அன்னையின் அருளால்தான். அவன் தினமும் பாடல் போட்டு, அந்த பாடல்மூலமாகவே தன்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டான். அவன் எங்களுக்குச் செய்த கொடுமைகள் அனைத்தும் அவனுக்குத் தானாகவே நேர்ந்தது. 2004ஆம் ஆண்டு அவன் செய்த கொடுமைகள், ஆடிய ஆட்டம் அனைத்தும் 2004 டிசம்பர் மாத இறுதியிலே அடங்கியது. எங்களுக்கு அங்கு இருக்க விருப்பமில்லை. அதனால் வீட்டை விற்க முடிவு செய்தோம். ஆனால் அனைவரும் அடிமாட்டு விலைக்கே கேட்டனர். பிறகு அன்னையிடம் நான் பிரார்த்தனை செய்தேன். அனைவரும் வியக்கும்படி ரூ.1 லட்சத்திற்கு விற்று, நாங்கள் அங்கிருந்து வந்தவிதம் 100 பேரில் ஒருவராய் எங்களை அன்னை உயர்த்திய விதத்தினைக் கண்டு மெய்சிலிர்த்தோம். குருநாதர் வழிப்படி நடந்து கொண்டதால் எங்கள் வாழ்வில் நடந்த அதிசயத்தை நான் கூறவேண்டும் என்று நினைத்துகொண்டிருந்த நிலையில் அன்னை எனக்கு வாய்ப்பு அளித்த விதத்தினை நான் எப்படிச் சொல்வேன். எனக்குக் கண்ணீர்தான் வருகிறது. நாங்கள் வாங்கிய வீட்டில் ஏற்பட்ட துன்பங்கள் அனைத்தையும் தாயாய் வந்து தாங்கிச் சென்ற தெய்வம் என்ற தலைப்புப்படி நடந்தது.



6. 2005ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முத்திக்கடையில் குடியேறினேன். அன்னையின் அருளால் ஜெயந்தி, டிப்ளமோ பிசியோதெரபி; தமிழ்ச்செல்வி, பி.காம். இறுதி ஆண்டு; பிரேம்குமார், பி.எஸ்.சி. இயற்பியல் முதல் ஆண்டு படிக்கிறார்கள். நான் என்னுடைய வருமானத்திற்கு மீறி அவர்களைப் படிக்கவைக்கிறேன். அதனால் எங்களுக்கு கஷ்டம்என்று உடன் பிறந்தோரும், மற்றவர்களும் ஏளனமாகப் பார்க்கின்றனர், பேசுகின்றனர். அன்னையின் அருளால்தான் எங்கள் குடும்ப வருமானத்திலேயே யாரிடமும் கடன் வாங்காமல் கஷ்டப்பட்டுப் படிக்க வைக்கிறோம்.

என் கணவர் தற்காலிக வேலையினைச் செய்துவருகிறார். என் மகள் பிரைவேட் ஹாஸ்பிடலில் வேலை செய்கின்றாள். இருவரின் சம்பாத்தியத்தில்தான் குடும்பம் நடத்துகிறேன். எங்களுக்குப் போதிய வருமானம் கிடைக்கவில்லை. பொருளாதார முன்னேற்றம் கிடைக்க நாங்கள் என்ன வழிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்என்று கூறுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

நேரடியாக உடனே தனக்குமட்டும் பலன் தாராததை சுயநலமி நினைவு வைத்திருக்கமாட்டான். பிரபலமாகிக்கொண்டிருப்பவன் தன்வெற்றிகளில் எதையுமே நினைக்க முடிவதில்லை. ஆழ்ந்த அன்புக்கு உண்மையான பதில் நினைவையே அழிக்கும்.

***பழையவை அத்தனையும் தானே அழியுமளவு அன்னைமீது நமக்கு அன்பு சுரக்குமா?***

## லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XV. The Supreme Truth-Consciousness

The Supermind possesses this truth of unity. Page No.137
It always acts on this truth. Para No.11
To the mind this is only a secondary truth.
Or, it is an acquired truth to the Mind.
It is not the very grain of its seeing.
Supermind sees the universe as itself.
Its contents too are seen as itself.
It is a single indivisible act of knowledge.
It is an act which is its life.
That act is its very movement of its self-existence.
This is the comprehensive divine consciousness.
Its aspect of Will acts not to guide.
Nor does it govern the development of cosmic life.
But it consummates it in itself by an act of power.
This power is inseparable from its knowledge.
It is one with the movement of self-existence.
It is indeed one and the same act.
We have already seen this differently.



## 15. உயர்ந்த சத்தியஜீவியம்

சத்தியஜீவியத்திற்கு இந்த ஐக்கியத்தின் சத்தியம் உண்டு.
எப்பொழுதும் அது இந்த சத்தியத்தின்படி நடக்கும்.
மனத்திற்கு இது இரண்டாம்பட்ச உண்மை.
அல்லது இது மனம் தானேபெற்ற உண்மை.
இவ்வுண்மை மனத்திற்கு அதன் உடன்பிறந்ததில்லை.
சத்தியஜீவியம் பிரபஞ்சத்தைத் தானாகவே காண்கிறது.
பிரபஞ்சத்தின் உள்ளடக்கமும் தானாகவே தெரியும்.
அது ஒரு முழுமை, பகுக்க முடியாத ஞானம்.
இச்செயல் சத்தியஜீவியத்தின் உயிர் மூச்சு.
இச்செயல் அதன் வாழ்வின் சலனம்.
இது தெய்வீக ஜீவியம் அனைத்தையும் தன்னுட்கொள்வது.
அதன் செயல்திறன் அதன் போக்கை நிர்ணயிப்பதில்லை.
அதன் பிரபஞ்ச வாழ்வின் வளர்ச்சியை ஆட்சி செய்வதுமில்லை.
தன்னுள்ளே தன் சக்தியால் அதைப் பூர்த்தி செய்கிறது.
அதன் ஞானத்திலிருந்து இந்த சக்தியைப் பிரிக்க முடியாது.
அதன் சுயவாழ்வின் அசைவுடன் இது ஒன்றியது.
சொல்லப்போனால் அது ஒரே செயல்.
இதை நாம் ஏற்கனவே கண்டோம்.

**The universal force and universal consciousness are one.**
**(Cosmic force is the operation of cosmic consciousness).**
**So also divine Knowledge and divine Will are one.**
**They are the same fundamental movement.**
**That movement is an act of existence.**

**Page No.138**
**Para No.12**

**Comprehensive Supermind is indivisible.**
**It contains all multiplicity.**
**It does not derogate from its own unity.**
**We have to insist upon this truth.**
**Our analytical mind erred initially.**
**We must get rid of that error.**
**Thus we will understand the cosmos.**
**A tree evolves out of the seed.**
**The tree is contained already in the seed.**
**The seed emerges out of the tree.**
**It is a fixed law.**
**It is an invariable process.**
**It reigns permanently.**
**It manifests the form.**
**We call it tree.**
**To the mind this is a phenomenon.**
**It is a birth.**
**It is life.**
**It is reproduction of a tree.**
**Mind considers it a thing in itself.**
**On that basis Mind studies.**
**It classes and explains the birth of a tree.**
**It explains the tree by the seed.**
**It explains the seed by the tree.**



**பிரபஞ்ச சக்தியும், பிரபஞ்ச ஜீவியமும் ஒன்றே.**
**(பிரபஞ்ச சக்தி பிரபஞ்ச ஜீவியத்தின் செயல்).**
**அதேபோல் தெய்வீக ஞானமும், தெய்வீகச் செயலும் ஒன்றே.**
**இரண்டும் அடிப்படையில் ஒரே செயலாகும்.**
**அச்செயல் வாழ்வின் சலனமாகும்.**

**பூரண சத்தியஜீவியம் பகுக்கமுடியாத முழுமை.**
**அது எல்லாப் பகுதிகளையும் உடையது.**
**பொருள்கள் பெருகுவதால் ஐக்கியம் குறைவதில்லை.**
**இந்த உண்மையை நாம் வற்புறுத்தவேண்டும்.**
**பகுத்தறிவுள்ள மனம் ஆரம்பத்தில் செய்த தவறு இது.**
**இத்தவற்றை நாம் விலக்கவேண்டும்.**
**இவ்வழி நாம் பிரபஞ்சத்தை அறியலாம்.**
**மரம் விதையிலிருந்து வருகிறது.**
**விதையுள் மரம் இருக்கிறது.**
**விதை மரத்தினின்று வருகிறது.**
**இது நிலையான சட்டம்.**
**இது தவிர்க்கமுடியாத முறை.**
**இந்தச் சட்டம் நிலையாக ஆள்கிறது.**
**இது ரூபத்தை சிருஷ்டிக்கிறது.**
**நாம் அதை மரம்என்கிறோம்.**
**மனத்திற்கு இது ஒரு நிகழ்ச்சி.**
**இது பிறப்பு.**
**இது வாழ்வு.**
**ஒரு மரத்தை மீண்டும் இவ்வழி உற்பத்திசெய்கிறோம்.**
**மனம் இதை ஒரு தனிச்செயலாகக் காண்கிறது.**
**அவ்வடிப்படையில் மனம் ஆராய்கிறது.**
**பகுத்தும் சேர்த்தும் மனம் மரத்தை விளக்குகிறது.**
**மரத்தை விதைமூலம் விளக்குகிறது.**
**விதையை மரத்தைக்கொண்டு விளக்குகிறது.**

**It declares a law of Nature.**
**But, it has explained nothing.**
**Here is a mystery.**
**Mind has analysed the mystery.**
**It declares its process.**
**It also records its analysis.**
**Suppose it perceives a soul.**
**It can see the secret consciousness as the soul.**
**It is the real being of this form.**
**The rest is merely a settled operation.**
**It is a manifestation of the force.**
**Still, it is not all right.**
**It regards the form as a separate existence.**
**It has a separate law of nature.**
**It is its process of development.**
**In the animal and the man the same thing occurs.**
**Man has his conscious mentality.**
**The separative tendency is prominent.**
**It is induced to regard itself as a separate object.**
**It thus becomes a conscious subject.**
**The other forms too become separate objects.**
**They are the objects of its mentality.**
**This is a useful arrangement.**
**It is necessary to life.**
**It is the first basis of all its practice.**
**This is accepted by mind as an actual fact.**
**From there proceeds all the error of the ego.**

*Contd....*

❀❀❀



**இது இயற்கைச்சட்டம்.**
**எதுவும் விளக்கப்படவில்லை.**
**இது புதிர்.**
**மனம் புதிரை ஆராய்கிறது.**
**புதிர் செயல்படும் வழி புரிகிறது.**
**அதை எழுதிவைக்கிறது.**
**அங்கு ஆத்மாவைக் காணலாம்.**
**இரகஸ்ய ஜீவியத்தை ஆத்மாஎனக் கண்டுகொள்ளலாம்.**
**அது ரூபத்தின் ஜீவன்.**
**மற்றவை வழக்கமாக நடைபெறும் செயல்கள்.**
**சக்தி சிருஷ்டியாக வெளிப்படும் வகையிது.**
**இருந்தாலும், இது சரியில்லை.**
**இது ரூபத்தை தனித்த அம்சமாகக் கருதுகிறது.**
**அதற்குத் தனித்த சுபாவத்தைக் கற்பிக்கிறது.**
**இதுவே வளர்ச்சியின் வழிமுறை.**
**மனிதனும் விலங்கும் இப்படிச் செயல்படுகின்றனர்.**
**மனிதனுக்குத் தெளிவான மனம் உண்டு.**
**தனித்தியங்கும் போக்கு பிரதானமாகிறது.**
**தான் தனிப்பொருள்எனக் கருத வேண்டுகிறது.**
**அவ்வழி மனம் தன்னையறியும் அகமாகிறது.**
**மற்ற ரூபங்களும் தனித்த பொருள்களாகின்றன.**
**அவை அதன் மனப்போக்கின் பொருள்கள்.**
**இது செயல்பட உதவும் வழி.**
**இது வாழ்வுக்கு அவசியம்.**
**எல்லாச் செயல்களுக்கும் இது முதல் அடிப்படை.**
**மனம் இதையே முடிவான செயலாகக்கொள்கிறது.**
**இதிலிருந்து அகந்தையின் அனைத்து தவறுகளும் எழுகின்றன.**

*தொடரும்....*

❀❀❀

**P.71 The eyes of mortal body plunge their gaze**
**Into Eyes that look upon eternity.**

**காயமான உடலின் ஊனமான கண்கள் பிரம்மத்தைக் கண்ட நெற்றிக்கண்களை ஊடுருவும்.**

- ✡ உயர்ந்த உலகின் காலத்தின் வழிப்போக்கன் உள்ளே சென்று ஆராய்வான்.
- ✡ முயற்சியின் முடிவில் முடியிலிருந்து எழும் உச்சாடனம்.
- ✡ தூரம் குரல் கொடுத்து, புலப்படாதது கிட்டே வந்து ஸ்பர்சிக்கிறது.
- ✡ காணாத எல்லைக்கல்லைக் கடந்துவந்தான்.
- ✡ ஊனக்கண்ணின் எல்லையைக் கடந்தான்.
- ✡ உலகை உள்ளே தானாகக் காணும் ஞானதிருஷ்டி.
- ✡ உருவாகும் உலகத்துள் உறையும் ஆத்மா.
- ✡ அவ்வாத்மா தன்னையும் அறியாது, அவனையும் அறிய முடியாது.
- ✡ இலக்கற்ற இலட்சியத்தின் மேல்நிலை அடையாளம்.
- ✡ அகம் கண்ட ஆழத்தை அறிந்துரைக்கும் ஞானம்.
- ✡ ஒளியைத் தேடும் இருளின் ஆத்மா அவன்.
- ✡ அழியாத அமரத்துவத்தின் அழியும் வாழ்வு.
- ✡ புவியில் ஜனித்த புனித மரக்கலம்.
- ✡ சிறுஉணர்வின் குறுகிய பாதை.
- ✡ அலையாக எழும் காலத்தின் மந்திரசக்தியைக் கண்டான்.
- ✡ உலகைக் கவ்விய இருளைப் போக்கும் ஜோதியெனும் சந்திர ஒளி.
- ✡ பார்வையிலிருந்து விலகும் குறுகிய நோக்கங்கள்.
- ✡ கனவுலக ஜோதியின் பனித்திரைபோல.
- ✡ புதிரான கரையின் புலப்படாத எல்லை.
- ✡ பாதாள இருளின் ஆழ்ந்த கடலில் அலையும் மாலுமி.
- ✡ ஜொலிக்கும் நட்சத்திர உலகில் சஞ்சாரம் செய்பவன்.



- ✡ ஜடம்எனும் கப்பல்தளத்தில் ஆன்மீகச் சூரியனை நாடும் அன்பன்.
- ✡ ஆயிரம் ஒலியின் சப்த அலைகளின் ஊடே,
- ✡ கண்டறியாத கனத்த மௌனத்தூடே,
- ✡ வினோதமான லோகத்தூடே வானவெளியை நோக்கி,
- ✡ புவியின் ஆடையலங்காரத்தைக் கடந்து,
- ✡ தெளிந்த புலம் கடந்த தெரியாத இலட்சியம்.
- ✡ எவருக்கும் விளங்காத, எங்குச் செல்கிறோம்என அறியாத,
- ✡ எந்த இலட்சியத்தை இரகஸ்யமாகத் தாங்கும் மனிதன்,
  லோகமாதா எதையளித்தாள்என அறியமுடியாத இரகஸ்யம்.
- ✡ ஆட்டுவித்தான், ஆட்டத்தின் மறைந்துள்ள வலிமை,
- ✡ அலைமோதும் ஆழத்தின் எழுச்சியின் வேகம் நடத்தும் செயல்.
- ✡ இடியோசையின் கர்ஜனையில், சலனமற்ற நிசப்தத்தில்,
- ✡ பனியும் மூடுபனியும் பார்க்கவிடாத அவலட்சணத்தில்,
- ✡ அகிலத்தின் ஈஸ்வரி அனுப்பிய ஆணையைத் தாங்கிச் செல்கிறான்.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

எண்ணத்திலிருந்து ஜீவியத்திற்குப் போனால் அவிழாத சிக்கல்கள் அவிழும்.

***எண்ணத்தின் சிக்கல்களை ஜீவியம் அவிழ்க்கும்.***

### ஸ்ரீ அரவிந்த சுடர்

ஞானத்தைப் பெற்றபொழுது “ஞானோதயம்” என்ற உணர்வு ஏற்படுவதுபோல் கண்மூடியாக வாழ்வை நடத்துபவன் கண்ணைத் திறந்தவுடன் ஆச்சரியப்படுகிறான்.

***பார்வை குருடனுக்கு ஞானோதயம்.***

# அமெரிக்காவின் முன்னேற்றத்திலிருந்து இந்தியர்களாகிய நாம் அறிந்துகொள்ள வேண்டியது

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

N. அசோகன்

**8. தோற்றத்தைவிட உள்ளிருக்கும் சாரம் முக்கியம். சாரத்தை கருதுபவன் விரைவில் முன்னேறுவான். தோற்றத்தை கருதுபவன் பின்தங்குவான்.**

முன்னேற்றத்திற்கு முக்கியமானது உள்ளுறை சாரம்தானேயொழிய தோற்றம் அவ்வளவாக முக்கியமில்லை. தோற்றம் உள்ளுறை சாரத்தை பிரதிபலிக்கிறதுஎன்று நாம் பொதுவாக நினைக்கிறோம். அதனால் தோற்றம் சரியாகவிருந்தால் உள்ளுறை சாரமும் சரியாகவுள்ளதாக வைத்துக்கொள்கிறோம். இப்படி நாமேவொரு associationஐ வைத்துக் கொள்வதால் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. தோற்றம் சாரத்தை பிரதிபலிக்கின்றதுஎன்பது நாளடைவில் மாறி, தோற்றமே சாரத்திற்கு சமமாக எடுத்துக்கொள்ளப்பட்டு சாதித்துவிட்டதாக ஒரு போலியான திருப்தி உண்டாகிவிடுகிறது. ஆனால் உண்மையில் முன்னேற்றமில்லை. தோற்றத்தையே சாரமாக, தவறாக எண்ணிவிட்டதால் முன்னேற்றத்திற்கு பதிலாகச் சரிவுதான் வந்துள்ளதுஎன்பது ஒரு காலகட்டத்தில் தெரியும் பொழுது ஏமாற்றமும் அதிர்ச்சியும் வருகிறது.

நல்ல கேரக்டர் உள்ளவர்கள் பொதுவாக நல்ல mannersஉம் உள்ளவர்களாக இருப்பார்கள். இதனால் மக்களிடையே கேரக்டருக்கும் mannersற்கும் இடையே ஒரு association உருவாகிறது. நாளாவட்டத்தில் நல்ல manners இருந்தாலே நல்ல கேரக்டரும் இருக்கும் என்றோர் அர்த்தம் பண்ணிக்கொள்கிறார்கள். Mannersஎன்பது தோற்றம்; கேரக்டர்என்பது சாரம். தோற்றம் சரியாகவிருந்தால் சாரமும் சரியாக இருக்கும்என்ற அவசியமில்லை. தவறான கேரக்டர் உள்ளவர்கள்கூட போலியாக நல்ல mannersஐக் கடைப்பிடித்து ஊராரை ஏமாற்றலாம் என்றாகிறது. இதனால் நல்ல manners உள்ளவரை நல்லவர், நாணயமானவர்என்று நினைத்து கடன் கொடுத்து ஏமாந்துபோகின்றவர்கள் உண்டு.



ஒரு காலத்தில் பணக்காரனுக்கும் ஏழைக்கும் இடையே உடை வித்தியாசம் நிறையவிருந்தது. இன்று அந்த வித்தியாசம் மிகவும் குறைந்துவிட்டது. கார் டிரைவர்கள்கூட பணக்கார வாலிபர்களைப்போல கோல்டு வாட்சும் விலையுயர்ந்த பேண்ட், சர்ட் மற்றும் கூலிங்கிளாஸுடன் காட்சியளிக்கிறார்கள். இப்படிக் காட்சியளிக்கும் கார் டிரைவரை கார் வைத்துள்ள பணக்கார வாலிபன்என்றொரு பெண் நினைத்துக் காதலித்து ஏமாந்துபோவதாக திரைப்படக் காட்சிகள் வருகின்றன.

திரைப்படங்களுடன் இத்தகைய காட்சிகள் நின்றுவிடுவதில்லை. நிஜவாழ்க்கையிலும் இப்படித் தோற்றத்தையும் சாரத்தையும் மாற்றிப் புரிந்து கொண்டு முன்னேற்றத்தைக் கெடுத்துக்கொள்கின்ற நிகழ்ச்சிகள் நடக்கத் தான் செய்கின்றன. அமெரிக்கர்கள் பொதுவாக சாரத்திற்கு அதிக மதிப்புக் கொடுத்து, தோற்றத்தை இரண்டாம்பட்சமாகக் கருதக்கூடியவர்கள்தாம். இருந்தாலும் அவர்களுக்கும் சில சமயங்களில் அறிவு தடுமாற்றம் வந்து முக்கியமான விஷயங்களில் தவறு செய்யவும் நேரிடுகிறது.

பணமும் செல்வமும் உழைப்பு, திறமை மற்றும் ஆர்கனைஷேஷன் மற்றும் பண்புகளின் பலனாகக் கிடைப்பதென்று அமெரிக்கர்களுக்குப் பொதுவாகத் தெரியும். இவற்றின் அடிப்படையில்தான் அவர்கள் அந்நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டுபோனார்கள். இருந்தாலும் அமெரிக்கப் பொருளாதாரத்தில் ஸ்டாக் மார்க்கெட்என்ற புதிய ஸ்தாபனம் ஒன்று உருவாகியது. இங்கே கம்பனிகள் தம்முடைய பங்குகளை விற்க ஆரம்பித்-தார்கள். விலை குறைந்த சமயம் பங்குகளை வாங்கி விலையேறும் சமயம் விற்றால் நல்ல லாபம் கிடைக்குமென்ற வாய்ப்பு உருவானது.

இப்படி விலையேற்ற இறக்கத்தைப் பயன்படுத்தி, பங்குகளை வாங்குவது மற்றும் விற்பதுஎன்பதற்கு speculation என்று பெயர். இப்படி

speculation மூலம் நிறைய சம்பாதிக்கலாமென்ற ஆசை அமெரிக்கர்களுக்குகூட 1920ஆமாண்டுவாக்கில் நிறையவிருந்தது. வருமானத்திற்கு உழைப்புதான் அவசியம்என்று நம்பியிருந்த மக்கள் இப்பொழுது உழைப்பைவிட speculationற்கு முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்தார்கள்.

அமெரிக்கப் பொருளாதாரத்தில் அப்பொழுது ஒரு dynamic boom நிலவிக்கொண்டிருந்தது. இதனால் பங்கு மார்க்கெட்டும் மும்முரமாக இயங்கிக்கொண்டிருந்தது. Speculationஇல் ஆர்வமுள்ளவர்களுக்கு இது மிகவும் வசதியாகப்போய்விட்டது. பங்கு பரிமாற்றத்தைத் தீவிரப்படுத்தினார்கள். இதனால் பங்கு மார்க்கெட்டில் பங்குகளின் விலை செயற்கையாகப் பல மடங்கு ஏறியது. நாட்டில் உற்பத்தித்திறன் பெருகி, அதனால் நாட்டின் செல்வம் பெருகினால் அது உண்மையான முன்னேற்றமாகும். பங்கு மார்க்கெட்டில் பங்குகளின்விலை செயற்கையாக உயர்வதைப் பொருளாதார முன்னேற்றமாக எடுத்துக்கொள்வதுஎன்பது அறிவு இல்லாமல் தோற்றத்தைச் சாரமாகத் தலைகீழாகப் புரிந்துகொள்வதாகும்.

அடிப்படை ஆதாரமின்றி செயற்கையாக ஒன்றை வளர்த்தால் அதுவொரு கட்டத்தில் பாரம் தாங்காமல் முறிந்துவிழும். அப்படித்தான் செயற்கையாக உயர்ந்த பங்குகளின்விலை ஒரு கட்டத்தில் சரிய ஆரம்பித்தது. சரிவு அடிமட்டத்திற்கு வந்தபொழுது பொருளாதாரம் மிகவும் நலிந்துபோனது. சாரத்தை விட்டுவிட்டு தோற்றத்தைப் பாராட்டியதற்காக வாழ்க்கை அமெரிக்காவிற்கு வழங்கிய தண்டனையாக நாமிதை எடுத்துக்கொள்ளலாம்.

இந்தியர்களுக்கு இம்மனோபாவம் அமெரிக்கர்களைவிட அதிகமாகவே உண்டு. ஹர்ஷத் மேத்தா (Harshad Mehta) பங்கு மார்க்கெட்டில் செயற்கையாக இப்படியொரு உயர்வைக் கொண்டுவந்தபொழுது நிறைய பேர் பேராசைகொண்டு பங்குகளை வாங்கிப்போட்டனர். பின்னர் சரிவு வந்தபொழுது தாங்கமுடியாமல் நஷ்டமும் அடைந்தனர்.

வருமானத்தை உயர்த்தி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுஎன்பது சாரத்தை மேம்படுத்தி, தோற்றத்தை உயர்த்துவதாகும். இது உண்மை-



யான முன்னேற்றம்என்பதால் இந்த உயர்வு நீடிக்கும். ஆனால் வருமானம் என்ற சாரமில்லாமல் கடனை வாங்கியாவது ஆடம்பர வாழ்க்கை வாழ வேண்டும்என்று விரும்புகின்றவர்கள் விஷயத்தைத் தலைகீழாகப் புரிந்து கொண்டு செயல்படுகிறார்கள். ஆடம்பரம் நெடுநாள் நீடிக்காது. இது சாரமில்லாத தோற்றமென்பதால் ஒரு கட்டத்தில் சரியத்தான் செய்யும்.

பொருளாதாரத்தில் செய்த தவறுகளை அமெரிக்கர்கள் கல்வி விஷயத்தில் செய்யவில்லை. கல்வியின் சாரமென்பது கிரியேட்டிவ் சிந்தனையாகும். கல்வியின் தோற்றமென்பது ஞாபகசக்தியாகும். அறிவாளிகளுக்கு புத்திகூர்மையும் ஞாபகசக்தியும் சேர்ந்திருப்பதுண்டு. அதனால் ஞாபகசக்தியென்பது புத்திகூர்மையின் பிரதிபலிப்போ அல்லது சின்னமோ ஆகாது. அமெரிக்கர்கள் இதைச் சரியாகப் புரிந்துகொண்டு கிரியேட்டிவ் சிந்தனையைத் தூண்டும்வகையில் அவர்களுடைய கல்வித் திட்டங்களை வகுத்துள்ளார்கள்.

ஆனால் நாமோ ஞாபகசக்தியே புத்திகூர்மையின் அடையாளமென்று நினைத்துத் தோற்றத்தையும் சாரத்தையும் ஒன்றுபடுத்திவிட்டோம். அதனால் நாளடைவில் சாரத்தின் முக்கியத்துவம் போய் தோற்றமே பெரிதென்று ஆகி நாம் ஞாபகசக்தியைமட்டும் மேம்படுத்தும்வகையில் கல்வித்திட்டங்களையும் பரிட்சைகளையும் வகுத்துள்ளோம். அமெரிக்க மாணவ, மாணவியர்கள் எந்தவொரு விஷயத்தைக் கேள்விப்பட்டாலும், படித்தாலும் ஏன், எப்படி, எதற்குஎன்ற கேள்விகளை எழுப்பி பதில் கேட்கின்றனர். ஆனால் இங்கே இப்படி மாணவ, மாணவிகள் கேள்வி கேட்பதையே ஆசிரியர்கள் தவறாக நினைக்கின்றனர். இப்படிக் கேள்வி கேட்பது மாணவ, மாணவியரின் curiosityஐக் காட்டுகிறதுஎன்று ஆசிரியர்கள் இதை வரவேற்பதில்லை. மாறாக அதிகப்பிரசங்கித்தனமாக எடுத்துக்கொண்டு கண்டிக்கின்றனர்.

இதனால் நம் நாட்டில் இளையதலைமுறையினரின் புத்திகூர்மை வளர்வதற்கு ஏற்ற சரியான சூழ்நிலை அமையாமல் உள்ளது. இச்சூழ்நிலையை மாற்றி அமெரிக்கக் கல்விமுறைகளை நம் நாட்டிலும்

கொண்டுவந்தால் நம் இளையதலைமுறையினரின் அறிவுத்திறனும் வளரும். நம் நாட்டினுடைய இயற்கை வளங்களைவிட நம் இளைய தலை-முறையினரின் அறிவுத்திறன்தான் நம்முடைய உண்மையான சொத்து. அதை நாம் வளர்த்தால் நம் நாட்டின் வளர்ச்சி வேகத்தை மேலும் விரைவுபடுத்தலாம்.

இப்படி, சாரத்தை விட்டுவிட்டு தோற்றத்தைப் பிடித்துக்கொள்வது நம் நாட்டில் வழக்கமாகிவிட்டது. நம் நாட்டு ஆன்மீகத்தினுடைய சாரம் மிகப்பெரியது; மிகவும் சக்திவாய்ந்தது. அந்த ஆன்மீகச் சாரத்தை இன்று நாம் வெளிக்கொணர்ந்தாலும், அதனடிப்படையில் நம்முடைய பொருளாதார முறைகளையும் வாழ்க்கைப் பாணியையும் மாற்றினாலும் நம் நாட்டின் முன்னேற்றம் பலமடங்கு விரைவுபெறும்.

சுத்தம், செயல்நேர்த்தி, காலந்தவறாமை, பரநலம் பாராட்டல், அடுத்தவர் கண்ணோட்டத்தை மதித்தல், முன்னேறும் மனோபாவம் ஆகியவை எல்லாம் அடிப்படையில் ஆன்மாவிலிருந்து எழும் பண்புகளாகும். இவை நம் பொருளாதார வாழ்க்கையில் இப்பொழுது முழுமையாக வெளிப்பட்டாலும் விளைவுகள் சிறப்பாகவிருக்கும். ஆனால் நம்முடைய ஆன்மீக பலத்தை மறந்துவிட்டு நாம் சடங்கு, சம்பிரதாயம்என்பவற்றில் ஊறிவிட்டோம். இவை வெறும் தோற்றத்தை வலியுறுத்துபவை. இவற்றால் நம் எனர்ஜியும் நேரமும் வீணாகின்றனவேயொழிய ஆக்கப்பூர்வமான எந்த முன்னேற்றமும் வருவதில்லை.

Formalities, procedures மற்றும் முறைகளை நாம் வலியுறுத்துவதும் சாரத்தைக் கருதாமல் தோற்றத்தைக் கருதுவதால்தான். இங்கே ஒரு தொழில் துவங்குவதற்கு ஒரு தொழிலதிபர் பூர்த்திசெய்யவேண்டிய படிவங்கள், வாங்கவேண்டிய சான்றிதழ்கள், பெறவேண்டிய அனுமதிகள் ஆகியவற்றைப் பார்க்கும்பொழுது அமெரிக்கர்கள் அசந்துபோகிறார்கள். இதனால் ஏற்படும் காலதாமதம், எனர்ஜி விரயம் ஆகியவற்றை அவர்கள் கவனிக்கின்றார்கள். அவர்கள் நாடு தொழிலில் மிகவும் முன்னேறியிருப்-பதற்கு ஒரு முக்கியக் காரணம் இப்படிப்பட்ட procedureகளை அவர்கள்



எளிமைப்படுத்தியிருப்பதுதான். நம் நாட்டில் பல தொழிலதிபர்கள் தொழில் துவங்குவதில் ஆர்வம் குன்றிப்போவதற்கு இப்படிப்பட்ட formalities காரணமாக விளைகின்ற காலதாமதம் மற்றும் பணவிரயந்தான்.

துடிப்பும் ஆர்வமும்மிக்க இளைஞர்கள் தொழில் தொடங்க முன்வரும்பொழுது அவர்களுடைய ஊக்கத்தை பாராட்டும்வகையில் அரசாங்கம் formalitiesஐ எளிமைப்படுத்த முன்வரவேண்டும். அப்படி முன்வாராமல் formalitiesஐ வலியுறுத்தும்பொழுது தோற்றத்திற்கு முக்கியத்துவம் அதிகரித்து இளைஞர்களின் dynamism என்ற சாரம் புறக்கணிக்கப்படுகிறது.

இங்கே எந்தக் கைவேலையாக இருந்தாலும் கௌரவக்குறைவாக கருதப்படுகிறது. உயரதிகாரிகள் தொழிலாளிகளுடன் உறவாடுவதை தவிர்க்கின்றார்கள். இங்கே ஓர் உயரதிகாரி தனக்குக் கீழிருப்பவர்களை கட்டளையிடுவாரேயொழிய அவசரத்திற்குக்கூடத் தாமே அவ்வேலையைச் செய்ய முன்வரமாட்டார். இத்தகைய மனோபாவம் வேலையைப் புறக்க-ணித்து தோற்றத்தைப் பெரிதுபடுத்துவதாகிறது. ஆனால் அங்கே கைவேலை கௌரவக்குறைவுஎன்ற மனோபாவமே இல்லை. தொழிலாளியாக ஆரம்-பித்து முதலாளியாகத் தலையெடுத்தவர்கள் தேவைப்பட்டால் அவ்வேலை-யைத் தாமே செய்கிறார்கள். தொழிலாளிகளைவிடத் தாம் உயர்ந்து விட்டதாகக் கருதி அவர்களிடமிருந்து தள்ளி நிற்பதுமில்லை.

இங்கே விவசாயக் கல்லூரிகளில் பட்டப்படிப்புப் படித்தவர்கள் மீண்டும் நிலத்தில் இறங்கி விவசாய வேலையே செய்வதில்லை. படிப்பிற்கேற்ற அரசாங்கப் பணி, வங்கிப்பணி மற்றும் ஆராய்ச்சிக்கூடங்களில் ஆராய்ச்சிப் பணிஎன்று கௌரவமான வேலையைத் தேடி போய்விடுகின்றார்கள். விவசாயப் படிப்புப் படித்தவர்கள் மீண்டும் விவசாயத்தில் இறங்கினால் விவசாய உற்பத்தித்திறன் பலமடங்கு அதிகரிக்கும். Floriculture மற்றும் horticulture போன்ற விவசாயத் துறைகளில் நல்ல லாபம் காத்திருக்கின்-றது. படித்த விவசாயப் பட்டதாரிகள் கௌரவம் கருதாமல் இத்துறைகளில் இறங்கினால் salaried employmentஇல் கிடைப்பதைவிடப் பலமடங்கு அதிக

வருமானத்தைக் காணலாம்.

இங்கே வயதிற்குக் கொடுக்கின்ற முக்கியத்துவம் அங்கே காணப்படு-வதில்லை. வயதானவர்கள் அறிவு முதிர்ந்தவர்களாக இருப்பார்கள் என்ற நம்பிக்கை இங்கே நிலவுகிறது. அதனால் வயதானவர்களுக்கு இங்கே முதலிடம் கொடுக்கப்படுகிறது. வயதிற்கும் அறிவு முதிர்விற்கும் ஒரு தொடர்பு உண்டென்றாலும் வயதானவர்கள் எல்லாம் அனுபவ ஞானம் கொண்டவர்கள்என்று நாம் வைத்துக்கொள்ள முடியாது. அறிவில்லாதவர்-களுக்கு வயது அதிகமானாலும் அவர்களுடைய அனுபவ ஞானம் வளர்வதில்லை. இதனால் வயதிற்குரிய மரியாதைஎன்பது பல சமயங்களில் வெறும் தோற்றமாகிச் சாரமில்லாமல் போய்விடுகிறது.

அமெரிக்காவில் இளமையை விரும்புகின்றார்கள். கென்னடி மிகவும் பாப்புலரான அதிபராக விளங்கியதற்குக் காரணமே அவருடைய இளவயதுதான். அவருக்கு அனுபவம் குறைவுஎன்றாலும் cuban missile crisis என்றவொரு பெரிய நெருக்கடி ரஷ்யாவுடன் வந்தபொழுது அந்நெருக்கடியை அவர் சமாளித்தவிதம் அவருடைய அரசியல் சாமர்த்தியத்தை வெளிப்படுத்தியது. Bill Clinton பாப்புலராக இருந்ததற்கும் அவருடைய இளமையே காரணம். இங்கே இந்தியாவில் 60 வயதை தாண்டினால்தான் உயர் அரசியல் பதவிகளே கிடைக்கும்என்ற நிலைமை நிலவுகிறது. ராஜீவ் காந்தியும் ஜெயலலிதா அவர்களும்தான் இதற்கு விதிவிலக்காக உள்ளனர். ராஜீவ் அவர்களே இந்திராவின் புதல்வராக இல்லாமல்போனால் அவரால் பிரதமராக வந்திருக்க முடியுமாஎன்பது சந்தேகம். நம் நாட்டு மூத்தஅரசியல் தலைவர்களின் தளர்ந்த நடை சர்வதேச அரங்குகளில் நம் நாட்டின் மதிப்பைக் குறைப்பதை நாமறிவது இல்லை.

வயதிற்கு அறிவு முதிர்வு உள்ளதென்றால் இளமைக்கு எனர்ஜியும் உற்சாகமும் சாதிக்கும் வேகமும் உள்ளதென்பதை நாமறியவேண்டும். Bill Gates மற்றும் Steve Jobs போன்ற தொழிலதிபர்கள் இளமையின் சாதிக்கும் திறனுக்கு எடுத்துக்காட்டாகும்.



பெண்கள் உடலளவில் பலஹீனமானவர்கள்என்பதை காரணமாக வைத்து அவர்களை இரண்டாம்பட்சமாக நம் நாடு நெடுங்காலமாக நடத்திவந்துள்ளது. ஆனால் இன்று அவர்களுக்கும் படிப்பு, வேலை வாய்ப்பு, விழிப்புணர்வு வந்துவிட்டபட்சத்தில் அவர்களுடைய பலஹீனமான தோற்றத்தை நாம் பெரிதுபடுத்துவது சரியில்லை. இந்திரா காந்தி அம்மையாரின் தலைமைப் பண்புகளும் மனோதிடமும் பெண்களிடமும் சாதிக்கும் ஆற்றல் நிறையவுள்ளதுஎன்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கு-கிறது.

தோற்றத்தையும் சாரத்தையும் நாம் சற்றுக் கூர்ந்து கவனித்தால் தோற்றமென்பது விளைவாகவும் சாரமென்பது மறைந்திருக்கும் காரண-மாகவுமிருக்கும். மேலைநாடுகள் செல்வச்செழிப்புடன் காட்சியளிப்பது ஒரு தோற்றம். அவர்களுடைய உழைப்பு, திறமை, ஆர்கனைஷேஷன் மற்றும் பண்புகள் எல்லாம் மறைமுகமாகச் செயல்படும் காரணங்கள். அவர்களு-டைய செல்வச்செழிப்பான தோற்றத்தைப் பார்த்துவிட்டு அவர்களுடைய முன்னேற்றத்திற்கு பணமே காரணமென்று முடிவுசெய்து நமக்கும் இவ்வளவு முதலீடு கிடைத்தால் நாமும் பணக்கார நாடாக மாறிவிடலாமென்று முடிவு செய்கிறோம். இப்படிப் பலனைக் காரணமாகப் பார்ப்பது விஷயத்தைத் தலைகீழாகப் புரிந்துகொள்வதாகும். அவர்களுடைய பெரிய முதலீடே அவர்களுடைய நெடுங்கால உழைப்பு மற்றும் சேமிப்பு ஆகியவற்றிலிருந்து வருவதாகும். அப்பட்சத்தில் அந்த உழைப்பு மற்றும் சேமிப்புஎன்ற உள்ளுறை, சாரமின்றி வெறும் முதலீடுஎன்ற தோற்றத்தை மட்டும் நாம் நம்பிப் பெரிய முதலீட்டிற்குக் காத்திருந்தால் நாம் ஏமாற்றம் தான் அடைவோம்.

கையிலிருக்கும் முதலீட்டை வைத்து நம்மால் முடிந்த வேலையைத் துவக்கிப் படிப்படியாக வாழ்க்கையில் முன்னேறுவதுதான் உண்மையில் நிகழ்வது. பெரிய முதலீட்டிற்காகக் காத்திருந்து நேரத்தை வீணடிப்பது என்பதைத் தோற்றத்தைக் கண்டு ஏமாறுவதாகும்.

❀❀❀

# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**893) தீயமனிதனுக்குப் பணிவது தீமையைவிடக் கொடியது. சரியான எண்ணத்துடன் செய்தால் நம்முள் உள்ள தீமையையும் நம்மை நாடிவரும் தீமையையும் அழிக்க முடியும்.**

*தெளிவுடன் தீயவனுக்குப் பணிந்தால் உலகின் தீமை அழியும்.*

நாம் எதற்குப் பணிகிறோமோ அதன் வலிமை வளரும்.

அதன் பலனை நாம் தவறாது அனுபவிப்போம்.

கோள் சொல்பவனுக்குச் செய்தி கொடுப்பதைக் கடமையாக ஏற்றால் அவன் நம்மீது கோள் சொல்லி நம்மை அழித்து ஆனந்தப்படுவான்.

பாம்புக்குப் பால்வார்ப்பது, தீட்டிய மரத்தில் கூர்பாய்வது, வளர்த்த கடா மார்பில் பாய்வது பரம்பரை அனுபவம், விவேகம்.

இதைத் தெரியாமல் செய்யலாம்; கடமையெனக் கருதலாம்; பாசத்தால் செய்யலாம்; பலன் எந்த முறையிலும் தவறாது. பலன் வரும் வழி நாம் செய்த மனப்பான்மையைப்பொருத்தது.

தறுதலை வாழ்வை ஏற்றுத் திருமணம் செய்ய மறுத்தவருக்கு, திருமணம் செய்தால், அவர் வாழ்வு பொலிவுற்றது. அவர் பாதகம் செய்ய முடிவு செய்தபொழுது அது அவர் மனைவிமூலம் வந்தது.

உடன்பிறந்தவர்க்கு உதவியைக் கடமையாகச் செய்தால், அவர் துரோகம் "நீ யார் எனக்கு?" என்ற கேள்வியாக வந்து வாழ்வைச் சிதைக்கிறது.

மனையை இழந்தவர் சுயநலமினன்பதைக் கருதாது இழந்த மனையைப் பெற உதவினால், அவர் உன் நிலத்தில் பாதியை இனாமாகக் கேட்கிறார்.

மனை, நிலமாக வருவது கவனிக்கத்தக்கது.



வேலையை இழக்கும் வேலையை ஆர்வமாக, ஆர்ப்பாட்டமாகச் செய்ய முனைந்தவரைத் தடுத்து வேலையைக் காப்பாற்றினால், அவர் உதவியவர் வேலையை எடுக்க முனைந்து வெற்றிபெற்றார்.

எவருடைய திருமணத்திற்கு உதவினோமோ, அவர் உதவியவர் திரு-மணத்தை அழிக்க தயங்கவில்லை.

படிக்க உதவிசெய்தால், படித்தபின் படிப்புக்காக உனக்கு மரியாதை தர முடியாதுஎன்றார் ஒருவர்.

மனிதனுக்குத் தீமையும் உண்டு.

உதவிசெய்ய உலகம் ஒரு சட்டம் பின்பற்றுகிறது.

அதைப் பின்பற்றினால் உபத்திரவம் வாராது.

அன்னை ஒரு சட்டம் கூறுகிறார்.

அதைப் பின்பற்றினால் நல்லதுமட்டுமே வரும்.

தானே முனைந்து ஒரு செயலில் ஈடுபட்டால், முனைப்புக்குரிய பலன் வரும்.

வாழமுடியாதவருக்கு வாழ்வளிக்க முயன்றவரெல்லாம் "உன் வாழ்வை அழித்துக்காட்டுகிறேன்" என்ற சவாலைக் கேட்டனர்.

சுயநலமிக்குப் பிரச்சினையில்லை.

அறிவோடு செயல்படும் பரநலத்திற்குத் தொந்தரவில்லை.

அறிவுமில்லாமல், சூட்சுமமுமில்லாமல் செயல்படுபவர் அநேகர்.

அவருக்குத் தொந்தரவு தவறாது வரும்.

அவர் அன்பரானால், தவறாது காப்பாற்றப்படுவார்.

அன்னையிடம் வந்து காப்பாற்றவேண்டிய நிலைக்கு வருவதற்குப்பதிலாக அருள் பெறும் வாய்ப்பை ஏற்பது முறை.

எந்தக் காரணத்தைக்கொண்டும் தவறான மனிதனுக்கு நேரம் கருதி உதவினால், நேரம் பார்த்து, அம்மனிதன் கழுத்தறுக்கத் தவறமாட்டான். அன்னை நினைவு மேலிட்டால் அப்படிப்பட்ட சந்தர்ப்பம் விலகும். விரும்பி அதை மேற்கொள்பவர் அனுபவித்து அறிவு பெறவேண்டும். அடிபடாமல் அறிவுபெற அன்னை அன்பரை

விலக்கி அழைத்துப்போவார்.

❀❀❀

**894) நடத்தைக்குரிய சட்டங்களை மீறுவது எவராலும் ஏற்க முடியாத குற்றம்; பாவமாகும். ஆனால் சில சமயங்களில் உன் உயிரைக் காப்பாற்றும். தம்பதிகளில் ஒருவர் அப்படி நடந்தால் அடுத்தவரை நரகத்திலிருந்து காப்பாற்றும் நேரமும் உண்டு.**

*தெளிவுடன் ஏற்கும் கெட்ட நடத்தை அடுத்தவரை நரகத்திலிருந்து காப்பாற்றும்.*

ஆபத்திற்கு தோஷமில்லைஎன்பது மரபு.

கெட்டநடத்தையை - இலஞ்சம், கோள், பிறரழிய வேலைசெய்வது, கற்பை இழப்பது, திருடுவது - ஏற்கும் சந்தர்ப்பம் வாழ்வில் வருவதில்லை.

அற்புதமான ஆத்மாவுக்கு அமிர்தமான நேரத்தில் அது வரும்.

நம்மை எவரும் பிள்ளையைக் கறிசெய்து கொடுஎனக் கேட்பதில்லை.

இந்திரன் அகல்யாவை நாடும் நிகழ்ச்சி வாழ்விலில்லை.

சிவபெருமான் மனைவியைக் கேட்டதும் வாழ்விலில்லாதது.

மோட்சவாயிலில் நின்றவர் எல்லையைக் கடக்கும் நேரம் அது வரும்.

அந்த நேரம் ஊருடன் ஒத்துவாழத் தோன்றினால் அவர் வந்ததை இழப்பார்.

சிறுத்தொண்டர் ஆணையை ஏற்றார்; மோட்சம் பெற்றார்.

அகல்யா ஆசைப்பட்டு, அதை நிறைவேற்றி, பெருமிதமடைந்து, ஆசைக்கு உரிய பலனையடைந்து கல்லாய் சமைந்தாள்.

இயற்பகை ஆணையை ஏற்ற மனைவியின் கற்பு காப்பாற்றப்பட்டு மோட்சம் கிடைத்தது.

அனுசுயா பொறாமைக்குப் பலியானாள். லக்ஷ்மியும், பார்வதியும் பெற்ற பொறாமைக்குத் திருமூர்த்திகள் உடந்தையாயிருந்து கற்பின் பலத்தால் அவமானம் அடைந்தனர்.



தெய்வலோக மாதுஎன்பதால், அவளுக்குச் சட்டம் வேறுஎன்பதால், சந்திரனுக்குப் பிள்ளை பெற்ற தாரா பஞ்சகன்னிகைகளில் ஒருத்தியானாள்.

சட்டம் லோகம் மாறினால், மாறும்.

செயல் நிர்ணயிக்காது, மனநிலை நிர்ணயிக்கும்.

எதைச் செய்கிறோம்என்பதில்லை; ஏன் செய்கிறோம்என்பதே கேள்வி.

கொலையும் மோட்சம் தரும்என்பது சிறுத்தொண்டர் புராணம்.

கர்ணன் மோட்சம்பெற கிருஷ்ணன் அவனது கவசகுண்டலங்களைத் திருடினான்.

T.E. லாரன்ஸ் அனுபவம் ஒரே தகுதிகொண்ட இரு மனிதரிடையே, நிலைமை மாறினால் விஷயம் மாறும்எனக் காட்டுகிறது.

லாரன்ஸ் பிரிட்டிஷ் கர்னல். எதிரியான அராபியரை ஆதரித்தார்; பிரபலமானார்.

ஒரு சிப்பாய் தவறாகத் தண்டிக்கப்பட்டுத் தூக்குமேடைக்குப் போவதை எதிரியின் இராணுவம்என்பதையும் பாராது, தலையிட்டு அவனைக் காப்பாற்றினார்.

கொஞ்ச நாள் கழித்து அதே சிப்பாய் உண்மையில் தூக்குத் தண்டனை பெறும் குற்றத்தைச் செய்தான். சுடவேண்டிய பொறுப்பு லாரன்ஸ்க்கு சட்டப்படி வந்தது.

சுடும்பொழுது ஆழத்திலிருந்து சுட ஆசை எழுவதைக் கண்டு லாரன்ஸ் வெட்கப்பட்டார்.

நம் நியாயப்படி ஓர் உயிரைக் காப்பாற்றமுடியாது.
மனித சுபாவம் ஆழத்தில் காட்டுமிராண்டியானது.

இறைவனின் போக்கை ஏற்கமுடியாவிட்டால் இன்று மறுத்ததை நாளை செய்யவேண்டிவரும்.

மனிதாபிமானம் மேல்மனத்திற்குரியது. ஆழ்மனம் ஆழ்கடல். அது நரமாமிசம் சாப்பிட ஆசைப்படும்.

இத்தனைச் சட்டங்களும் அன்னையை ஆழத்தில் ஏற்றால் தலைகீழே மாறும்.

**அன்னையை ஏற்பதும், அன்னை நம்மை ஏற்பதும் மேல்மனத்துடன் நிற்கலாம். ஆழத்தை நாம் எட்டமுடியாது. ரிஷிகள் அதை நாடவில்லை. பகவானும் அன்னையும் வழிவகுத்ததால் நாம் அவர் போட்ட பாதையில் போகலாம். அவர்கள் போனவரை போகலாம். அது தூய்மையான யோகம். ஆழத்தை எட்டியதற்கு அடையாளம் ஜடம் நம் சொல்லுக்குக் கட்டுப்படுவது. 10 அடி தூரத்திலுள்ள புத்தகத்தை எடுக்க நினைத்தால் அதே நிமிஷம் ஒருவர் வந்து அக்காரியத்தைச் செய்வார். யோகம் சித்தித்த நிலையில் புத்தகம் தானே நகர்ந்து நம் கைக்கு தியோன் மனைவிக்கு வந்ததுபோல் வரும். கருமி தாராளமாக நடப்பது, வாய் ஓயாமல் பேசுபவர் மௌனமாக இருப்பது, ஏன் என் வீட்டிற்கு வந்தீர்கள்என்பவர் உபசாரமாக விருந்துசெய்வது, பொய்யை ஆதாரமாகச் சொல்பவர் மெய் சொல்வது, எவருக்கும் எந்த நல்லதும் செய்தறியாதவர் பெரிய நல்லது செய்வது, திருடன் கையில் போன பணம் வருவது அன்னை சட்டமாகும்.**

*தொடரும்.....*

❀❀❀

### ஜீவிய மணி

**தத்துவம் புரிந்தால் தலை நிமிரும்.**

### ஸ்ரீ அரவிந்த சுடர்

ஒருவன் தன் தாழ்ந்த விருப்பங்களைப் பூர்த்திசெய்து கொள்ளும் முறை, அவன் சாதிப்பதை நிர்ணயிக்கும். உடல் கடைசி நிலையிலுள்ளது. அதன் தேவையைத் திருமணத்தால் பூர்த்திசெய்கிறோம். அதனால் திருமணவாழ்வின் தரம் ஒருவன் தன் வாழ்வில் சாதிப்பதைக் குறிக்கும்.

***உன் நிலை உன் திருமணத்தின் நிலை.***





# மலரும் மணமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

மகேஸ்வரி

முல்லை அவசரமாகத் தன் கம்ப்யூட்டருக்குள் கணக்கையெல்லாம் ஏற்றிக்கொண்டிருந்தாள். "முல்லை, இங்கே கொஞ்சம் வர்றியா? கணக்கில் பணம் குறையுது. யாருக்கோ அதிகமா கொடுத்திருக்கேன் போலிருக்கு. ஒன்றல்ல, இரண்டல்ல, பத்தாயிரம் ரூபாய் குறையுது. ஒரு நூறு ரூபாய் கட்டை அதிகமா கொடுத்திருக்கேன். இன்றைக்கு ஐம்பதாயிரம், ஒரு இலட்சம், முப்பதாயிரம்என நிறைய பேர் எடுத்திட்டு போயிருக்காங்க, சம்பள தினமல்லவா? யாரிடம்போய் கேட்பது என்று தெரியவில்லை. நானும் ஞாபகப்படுத்திகொண்டு பார்க்கிறேன். எதுவும் நினைவிற்கு வரவில்லை. மனம் படபடக்கிறது, தலைக்குள் பட்டாம்பூச்சி பறக்கிறது" செண்பகம் மெதுமெதுவாக இண்டர்காமில் சொன்னதைக் கேட்ட முல்லை, "இதோ நான் வருகிறேன். நிதானமாகப் பார்க்கலாம். நிச்சயமாகக் கண்டுபிடித்து விடலாம்" என்று தைரியமாகச் சொன்னாள். ஒவ்வொரு எண்ட்ரியாகப் பார்த்துக்கொண்டு வந்தவளுக்கு செண்பகம் சொன்னதுபோல் இன்றைக்கு நிறைய பேர் அதிகமாகப் பணத்தை எடுத்துக்கொண்டும் போயிருக்கிறார்கள், நிறைய பேர் அதிகமாக, அதாவது பத்தாயிரத்திற்கும் மேலாகப் பணம் கட்டியிருப்பவர்கள் எண்ணிக்கையும் கணிசமாக இருக்க, திரும்பத் திரும்ப எத்தனை பேர்களுக்குப் போன் செய்து கேட்பது என்று தெரியாமல் தவித்தாள். யாராவது அதிகமாக எடுத்துச் சென்றவர்கள் தாமாகவே கொண்டுவந்து கொடுத்தால்தான் கிடைக்கும் என்ற நிலைக்கு வர, மதியம் யாரும் 10,000த்திற்குமேல் எடுத்துச் செல்லவில்லை; காலையில் தான் எடுத்துச் சென்றிருக்கிறார்கள்என்று பார்த்தவுடன், இந்த நேரத்திற்குள் நிச்சயமாகப் பணத்தை எண்ணாமல் இருந்திருக்க மாட்டார்கள். அதிகமாக இருந்திருந்தால் கொண்டுவந்து கொடுத்திருக்க வேண்டும்.

இல்லையென்றால் போனாவது செய்திருக்கவேண்டும். இந்த இரண்டில் ஒன்றும் நடக்கவில்லை. அதனால், நிச்சயமாக இனி பணம் வரும் என்ற நம்பிக்கையில்லாது மனம் சோர்ந்துவிட்டது. அவள் மேனேஜராக இருக்கின்ற இந்த 5 வருடத்தில் இம்மாதிரி ஒரு தடவைகூட நடந்ததில்லை. ஏதோ கொஞ்சமாக இருந்தாலாவது சரி செய்துவிடலாம். பத்தாயிரம் என்றால் செண்பகத்திற்குத்தான் பொறுப்பு என்றாலும், செண்பகத்தின் குடும்பத்தைப்பற்றி எல்லாமும் தெரிந்திருந்த முல்லைக்கு இந்த பத்தாயிரம் அவளுக்கு எத்தனை சிரமமானது என்பதும் நன்றாகவே தெரியும். தன் கணக்கிலிருந்த பணத்தை எடுத்து உடன் கணக்கில் வைத்து, சரி செய்து, “வா புறப்படலாம்” என செண்பகத்தை அழைத்துக்கொண்டு புறப்பட்டாள். என்ன செய்வது என்று திரும்பத் திரும்பக் கேட்ட செண்பகத்திற்கு, “பார்ப்போம், ஏதாவது வழி கிடைக்கும். நீ தெரிந்து தவறு செய்யவில்லை. ஆனாலும் கவனக்குறைவாக இருந்திருக்கிறாய். பார்ப்போம். மனம் நிதானத்திற்கு வந்தபின்பு யோசித்தால் நிச்சயம் நல்லதொரு வழி கிடைக்கும். இப்பொழுது மீண்டும் மீண்டும் இதைப் பற்றி யோசித்து கொண்டு இருக்காதே. மனம் குழப்பமாக இருக்கும்போது யோசித்தால் தெரிகின்ற வழிகளெல்லாம் கோணலாகத்தான் இருக்கும். தைரியத்தை விட்டுவிடாதே. நிம்மதியாக இன்றைக்குத் தூங்கி எழுந்திரு. நாளை காலை மீண்டும் பார்ப்போம்” என்று கூறி, தன் கைனடிக்கில் ஏறினாள்.

அவளுக்கென்ன வலி, எனக்குத்தானே. என் நிலைமையில் எனக்கு எப்படி தூக்கம் வரும்? ஒரு ரூபாயா, இல்லை இரண்டு ரூபாயா, கையிலிருந்து கொடுத்து சமாளிக்க? யாரிடம் ஏமாந்து கொடுத்தோம்? தலைவலி மண்டையைப் பிளக்கிறது. போனவுடன் மாமியார் எதைப் புதிதாக ஆரம்பிக்க போகின்றார்களோ தெரியவில்லை. என்ன வாழ்க்கையோ? திருமணத்திற்கு முன்பு அம்மா, அப்பாவுடன் இருந்த வாழ்க்கைதான் சந்தோஷமான வாழ்க்கை. எத்தனைக் கனவுகளுடன் வந்தேன்? வந்த உடன், “உனக்கு எந்தத் தேதியில் சம்பளம் கொடுக்கிறார்கள்? 30ஆம் தேதியா இல்லை 1ஆம் தேதியா? எப்படி பேங்கில் கணக்கு வைத்திருக்கிறாய்? இனி அந்தக் கணக்கை ஜாயிண்ட் அக்கவுண்ட்டாக மாற்றிவிடு. செக்புத்தகத்தை என்னிடம் கொண்டுவந்து கொடு” இதுதான் முதலிரவில் ஒரு கணவன் பேசிய முதல் வார்த்தை என்று சொன்னால்



யாரும் நம்பமாட்டார்கள். அன்று வெந்துபோன மனது, கவுண்டரில் உட்கார்ந்தால் என்ன செய்கிறோம் என்பது நினைவிற்கு வருவதில்லை. எப்படி இந்தப் பத்தாயிரத்தைச் சமாளிப்பது? முல்லை கொடுத்துவிட்டாள். ஆனால் அவளுக்கு எப்படி அதைத் திருப்பிக் கொடுப்பது? ஒரு வண்டி வாங்கிகொடுத்தால் செலவு என்று தினமும் ஆபீசிற்குத் தானே வந்து கூட்டிப்போகும் கணவனுக்காகக் காத்திருக்கும் போது, செண்பகத்திற்குத் தலையே வெடித்துவிடும்போலிருந்தது. ஒரு காப்பி சாப்பிடக்கூட கையில் காசில்லை, மாதம் பதினாலாயிரம் சம்பளம் வாங்குபவளுக்கு. இந்த நிலையிலும் அழத் தெரியாமல் சிரிக்கத் தோன்றியது.

## கூமுகம்:

“இன்றைக்கு என்ன பூ வைக்கப்போகிறாய்?”

“கொடிரோஸ். நீங்கள் அதைத்தான் அதிகமாகக் கொண்டு வந்திருக்கின்றீர்கள்”.

“ஆமாம், நேற்று யாராவது வந்து கேட்டார்களா? நம் காயாம்பூவும், தாமரையும் வந்து கேட்டார்கள். தேவைகள் இருப்பவர்கள்தானே வந்து கேட்பார்கள்”.

‘‘யாருக்குத்தான் தேவையில்லாமல் இருக்கிறது. ஆனால் யார் அன்னையை ஏற்றுகொள்கிறார்களோ அவர்களின் தேவைக்கேற்ப அன்னை தாமாகவே அவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அப்படித் தேர்ந்தெடுத்தவர்கள்தான் இப்பொழுது காயாம்பூவும் தாமரையும்”.

“அம்மா, எனக்குக் கல்யாணம் நிச்சயம் செய்யப்போகிறார்கள். நேற்று நம் ராமபத்ரன் சார் தானாகவே கல்யாணச் செலவை ஏற்றுக்கொள்வதாக எங்கள் இருவரிடமும் சொல்லிவிட்டார். ஆனால், எங்கள் அக்காவிற்குக் கல்யாணம் செய்யாமல் நான் முதல்லே எப்படிச் செஞ்சுகிறது? எனக்கொண்ணும் புரியலைம்மா. நீங்கள் எனக்கொரு வழி காட்டுங்களேன்”.

“ஆமா, உங்க அக்காவிற்கு ஏன் கல்யாணம் கூடிவரலை?”

“யாருக்கும்மா தெரியும்? ஆனா, கையில பணம் இருந்தா நாளைக்கே கல்யாணம் செய்திடலாம்”.

"அப்படிச் சொல்லாதேடி. அப்படின்னா பணக்கார வீட்ல இருக்கிற பெண்களுக்கெல்லாம் நினைச்சவுடனே கல்யாணம் நடக்காது? அதனால அப்படியெல்லாம் சொல்லாதே. உங்க அக்காவுக்குக் கல்யாணம் செஞ்சுக்க இஷ்டம் இருக்கா?"

"அது ஒரு நாளைக்கி ஒரு மாதிரியா பேசுது, நிலையில்லை. அதுக்கு இஷ்டம் இருக்கா, இல்லையா, எனக்கு தெரியலைம்மா".

"அம்மா, முல்லையம்மா எனக்குப் பணம் தரேன்னு சொல்லியிருக்காங்க. ஆனா நேத்து ராத்திரி அவங்க வீட்டுக்குப் போய் சொன்னப்போ, இப்ப கையில இருந்த பணத்தை அவங்க பேங்க்கில இருக்கிற பிரெண்டுக்கு கொடுத்துட்டேனு சொல்றாங்க. சரி, எங்களுக்கு அவ்வளவுதான்".

"தாமரை, மாப்பிள்ளை யாராச்சும் பாத்தாங்களா?"

"எங்கம்மா, எங்க அப்பனுக்கும் ஆயிக்கும் சண்டை போடறதுக்கே நேரம் பத்தாது. இதுல யாரு பொறுப்பா பார்க்குறது. நான்தான் காயாம்பூகிட்டே சொல்லி பார்க்கசொல்றேன். அவரும் பார்க்கறாரு".

"இந்தப் பூவை கொண்டுபோய் உங்க வீட்ல வை. சண்டையும் குறையும், உங்க அக்காவுக்கு கல்யாணமும் நடக்கும்".

"ஏம்மா, நீங்க வைக்கிற பூவெல்லாமே கடையில கிடைக்கிற பூவா இல்லையேம்மா. ஆமா, உங்களுக்கு எங்கயிருந்து இந்தமாதிரி பூவெல்லாம் கிடைக்குது? நேத்து வச்ச பூவும், இப்ப நீங்க குடுக்கற பூவையும் இதுவரைக்கும் நான் பார்த்ததேயில்ல. எனக்குத் தெரிஞ்சது மல்லிகை, கனகாம்பரம், ரோஜா மட்டும்தான்".

"நேத்து நான் ஒரு அம்மா படத்தை கொடுத்தேனே, அதக் கொண்டு போய் உங்க வீட்ல வச்சியா?"

"நீங்க சொன்னாப்புலயே நல்லா சுத்தமா துடைச்சி, பூ வச்சி, வத்தி கொளுத்தி வச்சேன். எங்க அக்காவுக்கும் எனக்கும் சீக்கிரமா கல்யாணம் நடக்கணும் என்று கேட்டேன்".

"உன் அக்காவுக்கு எத்தன வயசு?"

"என்னைவிட எட்டு வயசு பெரியவங்க. ஆனா, ஆரம்பத்திலேர்ந்து கல்யாணம் வேண்டாம், வேண்டாம் என்று சொல்லிட்டிருந்தாள். எங்க



அப்பாவும் அம்மாவும் சும்மா சண்டை போட்டுகிட்டு இருப்பாங்க. அதப் பார்த்து எங்க அக்கா தனக்குக் கல்யாணம் வேண்டாம்னு சொல்லிகிட்டு இருந்தது".

••• ••• •••

"முல்லை, 4ஆம் நம்பர் வீட்டில் புதிதாக யாரோ குடி வந்திருப்பதாக காயாம்பூ சொன்னான். இப்பொழுது வந்திருப்பவர்கள் நம் அன்னையை ஏற்றுக்கொண்டிருப்பவர்கள்போலிருக்கிறது. காயாம்பூ ஒரு போட்டோவை ராம்பத்ரன் சார் வீட்டில் கொடுத்திருப்பான்போலிருக்கிறது. கனகாம்பரம் என்னிடம் கொண்டுவந்து காட்டி, என்னென்ன செய்யவேண்டும் என்று கேட்டாள்".

"அப்படியா, சரி. இதிலென்ன பெரிய விஷயம் இருக்கிறது. இப்பொழுது என்னைத் தொந்தரவு செய்யாதே. பேங்க்கில் ரூ.10000 அதிகமாகக் கொடுத்து, இன்றைக்கு என் கணக்கிலிருந்து அதைச் சரி செய்தேன். யாருக்கு அதிகமாகக் கொடுக்கப்பட்டது என்று தெரியவில்லை. 20 பேருக்குமேல் போன் செய்தும் விசாரித்துவிட்டேன். யாரும் அதிகமாக பெறவில்லை என்று சொல்கிறார்கள். இன்றைக்குக் கையில் இருந்ததால் கொடுத்துவிட்டேன். ஆனால் இது சரியல்ல. எங்கு தவறு இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. மனம் ஏதேதோ காரணங்களைச் சொல்கிறது. ஆனால் எதுவும் சரியாகப்படவில்லை. எந்த இடத்தில் நான் தவறு செய்திருக்கிறேன் என்று யோசித்துப்பார்த்தாலும் புரியவில்லை. காலையிலிருந்து நடந்த எல்லா விஷயங்களையும் அன்னையிடம், 'பணம் குறைகிறது' என்ற செய்தியைக் கேட்டவுடனேயே, சொல்லிவிட்டேன். இருந்தாலும் ஏதோ ஓர் இடத்தில் மனம் தயங்கிக்கொண்டே இருக்கிறது. அது எந்த இடத்தில் என்றுதான் புரியவில்லை".

"நீயாக எதையாவது யோசித்துக்கொண்டிருப்பதைவிட என்னுடன் வா. 4ஆம் நம்பர் வீட்டு அன்னையை பார்த்துவிட்டு வருவோம்".

"நான் வரவில்லை. நீ வேண்டுமானால் போய்விட்டு வா".

••• ••• •••

"கொடிரோஜாவை பார்த்தவுடன் காலிங்பெல்லை அழுத்தாமல் மல்லிகை ஒரு நிமிடம் நின்று ரசித்தாள். மிகநன்றாக இருக்கிறதே. நாமும் இதே

மாதிரி நம் வீட்டு வாசலிலும் வைக்கலாமா என்று யோசித்தாள். அன்னைக்கு மிகப்பிடித்த சுமுகம் கொட்டிக்கிடக்கிறதே. இந்தக் காலனியில் எல்லோர் வீட்டிலும் சுமுகம் நிலவவேண்டும் என்று அன்னையிடம் பிரார்த்தித்தவள், 'அம்மா, நீங்கள் விரும்பினால் கதவு திறக்கட்டும்' என்று மௌனமாக நினைத்தவுடன், கதவு திறக்கப்பட, அன்னைக்கு நன்றி செலுத்தினாள்.

"நான் 10ஆம் நம்பர் வீட்டில் இருக்கிறேன். என் பெயர் மல்லிகை. உங்கள் வீட்டின் பெயரென்ன சுமுகமா? வாசலில் மலர் வைத்திருக்-கின்றீர்களே?"

"உள்ளே வாம்மா. நீயும் அன்னையின் குழந்தையா?"

"என்னுடைய அம்மா மதர்".

"நன்றாகப் பேசுகின்றாய். என்ன செய்துகொண்டிருக்கிறாய்?"

"கல்லூரியில் பேராசிரியராக இருக்கிறேன். நானும் என் அக்காவும் தான் இருக்கிறோம். எங்கள் இருவருக்கும் எல்லாமே மதர்தான். நான் சாதாரணமாகச் சொல்லவில்லை. என் தாய், தந்தை இருவருமே எனக்கு மதரும், பகவானும்தான். அவர்களைத்தவிர சொல்லிக்கொள்ள யாருமில்லை. உங்கள் வீட்டு அன்னை ஏதோ என்னைக் கூப்பிட்டாற் போலிருந்தது என்று வந்தால், இதென்ன ஆச்சரியமாக இருக்கிறதே. நான் எப்பொழுது கண்ணை மூடினாலும் சரி, என் நெஞ்சத்தில் இந்த அம்மாதான் தெரிவார்கள். இவர்களிடம்தான் என் எல்லா விஷயங்களையும் பேசுவேன். அதனால்தான், தான் இங்கு நிதர்சனமாக வந்திருப்பதை சொல்வதற்காகக் கூப்பிட்டிருக்கிறார்கள். என்ன கண்களப்பா! இந்த மாதிரி புன்னகை! ஒரு வினாடி பார்த்தால்கூட போதுமே, ஏதோ எனக்கு மட்டுமே சொந்தமான பந்தத்தை தருகிற இந்தப் புன்னகை, அப்பா! எத்தனை தடவை பார்த்தாலும் சரி, இந்தப் புன்னகையை மட்டுமே பார்த்துக்கொண்டிருந்தால் போதும். வேறு எதுவுமே தேவைப்படாது. உலகில் ஏதேதோ வேண்டும் என்கிறார்களே, அவர்கள் எல்லோரையும் ஒரு வினாடி இந்தப் புன்னகை-யைப் பார்த்துவிட்டு, அதன்பின் ஏதாவது வேண்டுமா என்று கேட்டால், இதுவொன்றே போதும் என்றுதான் சொல்வார்கள் இல்லையாக்கா?"

''மல்லிகை, என் பெயர் என்னவென்று தெரியுமா? உனக்கு சகோதரியாக இருக்க எல்லாவிதத்திலும் சரியான பெயரைத்தான் எனக்கும் அன்னை வைத்திருக்கிறார்கள். அதுதான் ரோஜா".

"ரோஜாவும் மல்லிகையும் சேர்ந்தால் பின், அங்கு சரணாகதியும், தூய்மையும் சேர்ந்துவிட்டது என்றுதானே அர்த்தம்" என்ற குரல் ஒலிக்க திரும்பியவர்கள் முன்,

"என்னம்மா மல்லிகை, நான் சொன்னது சரிதானே? உன் அக்காவின் கணவன் மாயநாதன். நான் நம்முடைய பேங்க்கில் வேலை செய்து கொண்டிருக்கிறேன்".

''அப்படியானால் நிச்சயமாக நாம் எல்லோரும் ஒரு குடும்பம் ஆகிவிட்டோம். ஏனென்றால் என் அக்கா யூகோ பேங்க்கில் வேலை செய்கின்றாள்''.

''ஏனக்கா, எனக்கு ஒரு காபி கொடுக்கமாட்டீர்களா? எனக்கு எப்பொழுதுமே தியானம் செய்துவிட்டு எழுந்தால் பசிக்க ஆரம்பித்து விடும். இந்த வீட்டு மதர் ரூமில் உட்கார்ந்தவுடனேயே எங்கேயோ போய்விட்டேன். என்னையும் மீறி அரை மணி நேரம் உட்கார்ந்திருக்-கிறேன். முல்லை இன்றைக்கு இருக்கும் மனநிலையில் எதுவும் கேட்க மாட்டாள். அவள் பேங்க்கில் இன்றைக்கு பணம் குறைந்து போயிருக்கிறது".

காபியுடன் அடையும் அவியலும் கூடிய தட்டை கொண்டுவந்து நீட்டினாள் ரோஜா.

"ஆமாம், எனக்கு அடை பிடிக்குமென்று யார் சொன்னார்கள்?"

''நம் அம்மாதான். என்ன செய்யலாம் என்று யோசித்து கொண்டிருந்தவள் பார்வையில் எதற்கும் இருக்கட்டுமேஎன்று வாங்கிய திடீர் அடைமாவு கண்ணில் பட்டது. உடனேயே உனக்கு பிடித்ததைத்தான் அன்னை கண்ணில் காட்டியிருக்கின்றார்கள் என்று செய்துவிட்டேன்".

"நம் அம்மா என்றால் அம்மாதான். யாருக்கு எது தேவை என்பதை ஒவ்வொரு கணமும் பார்த்துப் பார்த்து மனதிற்கும் உணர்விற்கும் உடலுக்கும் கொடுப்பதோடு அல்லாமல் ஆன்மாவிற்கும் அளிப்பதில் நிகர் அவர் ஒருவர்தான் இல்லையா மாமா?"

"நிச்சயமாக. தியானத்தை முடித்தவுடன் நீ சாப்பிடவேண்டும் என்பதால்

அடையை தயாராக வைத்து இருக்கின்றார்கள். தினமும் ஆறு மணிக்கு நான் தியானம் செய்வது வழக்கம். முடியுமானால் நீயும் வாயேன்" என்று அன்புடன் ரோஜா அழைத்துக்கொண்டே, "இந்தா, இது முல்லைக்கு" என்று கொடுத்தாள்.

"நல்ல வேலை செய்தாய் ரோஜா. நான் நினைத்தேன், 'முல்லைக்கு கொடுக்க வேண்டும். மல்லிகை இங்கே சாப்பிட்டுவிட்டு அவள் மட்டும் அங்குத் தனியாக இருப்பாளே பசியுடன்' என்று. வாயேன், நாம் இருவருமே போய் அவளைப் பார்த்துப் பேசிவிட்டு, கொடுத்துவிட்டு வரலாம்" எனப் புறப்பட்டனர்.

அன்னையின் அறையிலிருந்த சுமுகத்தையும், முல்லையின் மனத்தில் அமைதியை வேண்டி வெண்விருட்சிப்பூவையும் மறக்காமல் ரோஜா எடுத்துக்கொண்டாள்.

"முல்லை, இங்கே பாரேன், நிச்சயமாக உன் பணம் மீண்டும் கிடைத்து விடும். கவலையே படாதே. உன்னைத் தேடி அன்னை சுமுகத்தையும், வெண்விருட்சிப்பூவையும் கொண்டுவந்திருக்கிறார்கள். இதைக் கையில் வைத்துக்கொள். உடலிலுள்ள ஒவ்வோர் அணுவிலும் அமைதி வந்து விட்டால் மனதிலுள்ள கலக்கம் நீங்கி, சுமுகம் வந்துவிட்டால், பின் அங்கு பிரச்சினைக்கு ஏது இடம்?"

ரோஜா கொடுத்த மலர்களைக் கையில் எடுத்தவுடனேயே, விருட்சிப்பூ அவளின் கைகளில் இருந்து தன் அமைதியை அவள் உடல் முழுவதுமாக சிறிதுசிறிதாக feed செய்ய, முல்லைக்குத் தான் எந்த இடத்தில் தவறு செய்தோம் என்று புரிந்துவிட்டது. காலையில் கைனடிக்கில் ஒரு கஸ்டமரை பார்க்கச் சென்றுகொண்டிருந்தபோது ஹாரன் அடிக்காமல் ஒரு சந்தில் அவசரமாகத் திரும்பியவுடன் அப்பக்கமாக வந்த இன்னொரு வண்டியில் வந்த ஒரு சின்ன பெண் ஒரு நிமிடம் தன்னை முறைத்துப் பார்த்தவுடன், தான் செய்த தவற்றை உணராமல், நிறுத்தாமல் வண்டியை ஓட்டிச் சென்றது நினைவிற்கு வந்தது. "அம்மா" என்று அழைத்தவுடன் அவளின் செல்போன் அடித்தது.



"மேடம், நான்தான் பேசுகிறேன். இன்றைக்கு நான் 50 ஆயிரம் பணம் கொண்டுவந்து கட்டினேன். ஆனால் ஐந்து கட்டிற்குபதிலாக 4 கட்டைதான் கட்டியிருக்கிறேன். செலானில் 500x100 என்று போட்டு விட்டிருக்கிறேன். இப்பொழுதுதான் எல்லாக் கணக்கையும் சரி பார்த்தேன். பத்தாயிரம் ரூபாய் அதிகமாக இருந்ததைக் கண்டுபிடித்தவுடன் என்னவென்று யோசித்துபார்த்தேன். அவசரத்தில் 4 கட்டு எடுத்து கொடுத்திருக்கிறேன். பேங்க்கிலும் கூட்டம் அதிகமாக இருந்தது. உங்கள் சீட்டைப் பார்த்தேன். அங்கு நீங்கள் இல்லை. அவசரமாகப் போக வேண்டியிருந்ததால் அப்படியே கிளம்பிவிட்டேன். வெரி சாரிம்மா".

அன்னையென்றால் அன்னைதான். மலரும் மனமும் சேரும்பொழுது அங்கு அற்புதம் மட்டும்தான் நிகழும்.

அடையைச் சாப்பிட்டுகொண்டே முல்லை எல்லா விவரங்களையும் சொன்னாள்.

கொடி ரோஸுக்கு மட்டும் தனித்திறனுண்டு. ஆனால் அது அமைதி-யுடன் சேரும்பொழுது அதனின் திறன் இன்னும் அதிகமாவதைப் பார்த்த ரோஜாவிற்கு அன்னையின் அற்புத மலர்களை நினைக்க நினைக்க ஆனந்தம் பொங்கியது.

*தொடரும்....*

### ஸ்ரீ அரவிந்த சுடர்

கனிந்த ஆத்மாக்கள் வாழத் தெரியாதவர்கள், புரட்சி வீரர்கள், வக்ரபுத்தியுடையவர்களாக இருப்பதுண்டு. சமூகத்தில் ஏற்றுக் கொள்ள முடியாத ஓர் அம்சமாவது உள்ளவர்கள் இவர்கள்.

***கனிந்த ஆத்மாக்கள் வாழத் தெரியாதவர்கள்.***

# அக வாழ்வு

கர்மயோகி

- ✡ சூடான நேரம் சூட்சுமமான வாய்ப்பு.
- ✡ மலையைப் புரட்டலாம்; மனத்தை அடக்க இயலாது.
- ✡ வெளிநாட்டார் இதுவரை ஆராயாத அரங்கம் இது.

❀ கோபம், வேகம், ஆசை, அரிப்பு, காமம், குரோதம், குடிமுழுகும் நேரம், உயிருக்கு ஆபத்தான சமயம்போன்றவை மனிதச்சுபாவம் மேலெழுந்து நிற்கும் நேரம்.

❀ ரிஷிகளும், தெய்வங்களும் தப்பிக்கமுடியாத இடம் இவை.

❀ *கட்டுப்பாட்டிற்கு இந்த நேரம் கட்டுப்படாதவன், கட்டுப்படப்போவதில்லை.* இதுவே கட்டுப்பாட்டிற்கு உரிய நேரம்.

❀ மனிதன் அன்பனாக மாறும் இடம், காலம் இதுவே.

❀ இது மனித முயற்சிக்கு அப்பாற்பட்ட இடம்.

❀ தெய்வ அனுக்கிரஹம் அருளாகச் செயல்படும் செயலிது.

❀ சூடு, சூட்சுமத்துள் நுழையும்.

❀ அதனால் சூட்சும உலகம் திறந்துகொள்ளும்.

திறந்த வாயில் சூடுபட்டவனுக்கும், எதிரிக்கும் பயன்படும்.

எதிரியில்லாவிட்டால், வாழ்வே - சூழல் - எதிரியாகும்.

❀ சூடுள்ள நேரமே சொரணை செயல்படும் நேரம்.

கோபம் வரும்பொழுது அடக்கத் தோன்றாது.

கோபத்தின் வேகம் ருசிக்கும். நம் ரசனைக்குரியது கோபம்.

வேகம் எழும்பொழுதுதான் வாழ்க்கை ஜீவனோடுள்ளது.



ஆசையில்லாத நேரம் 'சப்'பென இருக்கும்.

அரிப்பே வாழ்வானால், அது ஷாப்பிங் கடையில் அதிகமாக வெளிப்படும். கடைக்குப் போவதே ஜென்மம் சாபல்யமாகும் நேரம்என்பது இன்றைய கொள்கை.

காமம் எழுந்தால், கட்டுப்பாடு நினைவுக்கு வருமா?

காமம் உடலுணர்வு; குரோதம் உடலுடன் உயிரும் அறிவும் சேர்ந்து செயல்படுவது.

'அவனை விட்டேனா பார்' என்று மனம் கருவியது பல வருஷங்கட்கு முன்னிருக்கலாம். இன்று நினைத்தாலும் அதே வேகம் உள்ளிருக்கும். சற்று அதிகமாகவும் இருக்கும்.

❀ குடிமுழுகும் செய்தி மயக்கம் தரும். மயக்கமடையாமலிருக்க மனோதிடம் வேண்டும்.

❀ உயிருக்கு ஆபத்துஎன்றால் யோசனை தோன்றாது; உடலே செயல்பட்டு உயிரைக் காப்பாற்ற முயலும்.

❀ சொரூபம், சுபாவத்தால் வெளிப்படும் நேரம் இவை.

❀ இவை மனிதக் கட்டுப்பாட்டிலில்லாததால், இவற்றை விலக்கி சமாளித்தது துறவறம்.

❀ பூரணயோகம் இவற்றை ஏற்கிறது.

ஏற்றபின் மனம் அடங்குவதே, அடங்குவதாகும்.

அது நடக்கவேண்டுமானால், அவை வெளிப்படும் நேரம் நம்மால் அவற்றைக் கட்டுப்படுத்த முடியவேண்டும்.

❀ அதற்கு முன்னும், பின்னும் பேசுவது பேச்சு; பயனற்றது.

❀ அந்த நேரம் நம்மை நாம் மறந்த நேரம்.

கட்டுப்படுத்தத் தோன்றாது; முடியாது.

*அன்னை நினைவு அடியோடு மறக்கும் நேரம் இது.*

❀ அன்னை நினைவு, சுயநினைவு, கட்டுப்படுத்தும் எண்ணம் ஆகியவை இந்த நேரம் வந்துபோன பலமாதம் கழித்துத் தோன்றும். அடுத்தவர் கேட்கும்வரை

தோன்றாது.

முழுமுயற்சி செய்து சுயக்கட்டுப்பாட்டைத் தேடுபவர்க்கு பலநாள் கழித்து தாம் மறந்தது நினைவு வரும்.

சிலமணி நேரம் கழித்து நினைவுவந்தால் அவர் ரிஷி நிலையைக்கடந்தவர்.

இவை உலக அனுபவங்கள்.

❀ நாம் செய்யக்கூடியதுஎன்ன?

நம்மால் முடியாதது அன்னையை அழைத்தால் முடியும்என்ற கருத்தை மனம் ஏற்றால், ஏற்பது இதமானால், அவர்கட்கு வழியுண்டு.

வழி சுலபமாக இருக்காது.

சுலபமான வழி கேட்பவர், மலையேற வரக்கூடாது.

மலையேறுபவர் ரசிப்பது (adventure) முடியாததை முடியும்படி மாற்றும் முயற்சி.

பல்வேறு சாதனங்கள் பலவகையில் பயன்படும்.

மூச்சு விட ஆக்ஸிஜன் உதவும்.

பிடிப்புக்குரிய கருவிகள் பல.

உடலைக் காப்பாற்றும் உடைகள் பல.

எதுவும் மலையேறுவதை எளிதாக்காது.

முடியாததை முடியவைக்கும் சக்தி அன்னையின் சக்தியென மனம் ஏற்றால், மற்றவர்க்கு முடியாதது நமக்கு முடியும்.

❀ அன்னையை ஏற்றது பூரணமானால், விமானம் மலைச்சிகரத்தில் நம்மை இறக்கிவிடுவதுபோல் காரியம் முடியும்.

அப்படி முழுமையாக ஏற்கப் பெரும்பாடுபடுபவர்க்கு முதல்தேர்வு மனம் அடங்குவது.

அதுவும் சூடான நேரம் அடங்குவது.

அப்படி அடங்கினால் சூட்சும வாய்ப்பு எழும்.

அது வாய்ப்புஎனக் கொண்டால் வாழ்வு பரிமளிக்கும்.

வாய்ப்பை வாயிலாகக்கொண்டால் யோகவாயில் திறக்கும்.



யோகத்தின் முதற்படி அடங்கிய மனம்.

❀ வாய்ப்பை யோகவாயிலாக எடுத்துக்கொண்டபின் யோகம் செய்வதைப் பற்றிக் கருதாமல், அவ்வாய்ப்பு வாழ்வை யோகவாழ்க்கையாக்குவதைக் கருதும் கட்டுரை இது.

❀ முழுமுயற்சியை, முழுமுதற் கடமையாகக்கொண்டவர் அன்னை மறந்து போனதைத் தானே நினைவுகூறும் நேரம் பலமாதம், பலநாள், பலமணிஎனக் கண்டால், அவர் செய்யக்கூடிய முதற்காரியம்,

அந்நினைவு கோபம் அடங்கியவுடன் வர முயலவேண்டும்.

கோபம் வருமுன் நினைவு வருவது சித்தி.

❀ இதைப் பிரார்த்தனையாலோ, அழைப்பாலோ, அறிவாலோ, பக்தியாலோ, நம்பிக்கையாலோ, முயற்சியாலோ, அருளாலோ செய்யலாம்.

எதன்மூலம் செய்வதானாலும் முறையொன்றே.

- ✰ கோபப்பட வெட்கப்படவேண்டும்; பெருமைப்படக்கூடாது.
- ✰ கோபம் எழும்முன் நினைவுஎழ மனம் சம்மதிக்கவேண்டும்.
- ✰ தோல்வி முழுமையானாலும், மனம் தளரக்கூடாது.
- ✰ ஆயிரம் முறை தோற்றாலும், தள்ளிவரும் பலன் பெரியதாக இருக்கும் என மனம் அறியவேண்டும். அப்படி அறிவது சற்று ஆறுதலாக இருக்கும்.
- ✰ அருள் காரியத்தை ஏற்கனவே நல்லபடியாக முடித்துவிட்டது.

  நம் கோபம் அழியப் பலன் காத்திருக்கிறதுஎன்ற ஞானம் ஒரு சிறிதளவு பொறுமையைத் தரும்.
- ✰ நாமே கோபத்தைக் கிளறி ரசித்தால் கோபம் வளரும்.
- ✰ இரவு பகலாக இதிலிருந்து விடுபடப் பிரார்த்தனை செய்தாலும், நேரம் வந்தால் கோபம் நினைவை மீறும்.
- ✰ இது நம் முயற்சியாகவுள்ளவரை பலனிருக்காது.

❀ பிரார்த்தனை நம்முடையது, முயற்சி நம்முடையது, நினைவு நம்முடையது, சரணாகதியும் நம்முடையதுஎனில் மிஞ்சுவது 'நாம்';

சரணாகதியில்லை.

❀ நம்மை விலக்காமல் சரணாகதியில்லை.

நம்மை நாமே விலக்குவது எப்படி?

நினைவு நம்மை மறக்கச்செய்யும் நேரம் எழும் சரணாகதி சரணாகதியாகும்.

❀ இதை தியானத்தால் சாதிக்க முடியாது.

சமர்ப்பணமான செயலால் சாதிக்கலாம்.

சமர்ப்பணம் செயலுக்குமுன் எழவேண்டும்.

செயலுக்குமுன் உணர்வுண்டு.

அதற்குமுன் எழவேண்டும்.

உணர்வுக்குமுன் நினைவுண்டு.

நினைவுக்குமுன் சமர்ப்பணம் எழவேண்டும்.

நினைவுக்குமுன் சூட்சும நினைவுண்டு.

சூட்சும நினைவுக்கு முன்எழும் சமர்ப்பணம் பலிக்கும்.

க்ஷணம் தவறினால் சூட்சும நினைவு ஏமாற்றிவிடும்.

❀ இது 50 வருஷத்தில் பலிப்பது அருள்.

❀ பேரருள் அன்றே பலிக்கும்.

❀ அருளை மனம் நாடினால் மனம் அடங்கும்.

பேரருளை மனம் அறிந்தால் அடங்கிய மனம் அதே நிலையில் நீடிக்கும்.

❀ வயதான பெண் திருமணத்தை நாடும் தாயார் நினைவுபோல் சூடு அடங்க மனம் விழைந்தால், விழையும் மனம் அதை நிறைவேற்ற அன்னையை நம்பினால், மனம் அடங்குவதுபோல் தோன்றும்;

அடங்காது.

ஒவ்வொரு க்ஷணமும் நாம் அன்னையை நோக்கி நகர்கின்றோமா, நம்மை நோக்கி வருகின்றோமாஎனத் தெளிவாகத் தெரியும்.

அன்னையை நோக்கி நகர்வது நிலையானால், அடங்க முயலும் மனம் சற்று அடங்கும்.



தொடர்ந்து அன்னையை நோக்கி நகர்வது ருசித்தால் அப்படி நகர இயலும்.

ருசி, சந்தோஷமாக மாறினால் பலன் அதிகமாக இருக்கும்.

சரி, நம் முயற்சி பலிக்கிறதுஎனத் தோன்றினால் மனம் பழைய நிலைக்கே நிலையாக வந்துவிடும்.

அன்னையை நோக்கி நகர்வது தொடர்ந்தால், தொடர்வது ருசித்தால், ருசி ஆனந்தமானால், 'இது நம் முயற்சியன்று, அன்னையின் அருள்' எனத் தோன்றினால் சூடு அடங்கும்;

மனம் அடங்கும்.

மனமும் சூடும் அடங்கினால் சாந்தி பிறக்கும்.

அது சூட்சுமம் தன் வாயிலைத் திறப்பது.

சாந்தி நிலைத்தால், திறந்த வாயில் மூடாது.

வாயில் வாய்ப்பைக் காட்டும்.

வாய்ப்பைப் பலனாகக்கொள்ளாமல் யோகவாய்ப்பாகப் புரிந்து, அதை வாழ்வில் பயன்படுத்தினால் வாழ்வு யோகவாழ்வாகி, மனமும் ஜீவனும் அடங்கி, பூவுலகம் பொன்னொளிக்குரியதாகி, பூலோகச்சுவர்க்கம் நம் வாழ்வில் பிறக்கும்.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

உதவி, சேவைஎன்பவை சமூகத்தின் இலட்சியங்கள். ஆதியில் அவற்றிற்கு அர்த்தம் இல்லை. தன்னலத்திற்காகச் செய்யும் உதவியும் சேவையும் பயன் தரும். அதைக் கடந்த நிலையில் உதவி, சேவையில்லை.

*உதவியிலும் சேவையிலும் சுயநலமின்றி வேறில்லை.*

## யோகசக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**30. மனம் களைத்துப்போகும்வரை *The Life Divine*ஐப் படிப்பது.**

***The Life Divine*** ஆன்மீக அனுபவங்கள் சொல் வடிவில் எழுதப்பட்டது.

எளிய நூல்கள் செய்தி (information) தரும்.

பெருநூல்கள் புதிய கருத்துகளை எழுதும்.

கவி தன் திருஷ்டிக்குக் காவிய வடிவம் தருகிறார்.

*The Life Divine* பகவான் எழுதத் திட்டமிட்ட நூலில்லை.

1914இல் அன்னை பகவானைச் சந்தித்தபொழுது இந்த ஞானம் உலகம் பெறவேண்டியது; அதனால் இது எழுதப்படவேண்டும்எனக் கேட்டார்.

அன்னை சொல்லியவற்றை பகவான் ஆணையாக ஏற்றுச் செயல்பட்டிருக்கிறார்.

உடற்பயிற்சி செய்யச் சொல்லியதை மட்டும் மறுத்துவிட்டார்.

நூலைப் படிப்பவர் உடலுள் மின்சாரம் போன்ற சக்திப் பாய்வதைக் காணலாம்.

ஆன்மீக சக்தியைப் - அருளைப் - பெற நமக்கு அளவுண்டு.

*The Life Divine* படிப்பதால் அருள் நம் ஜீவனை நிரப்பும்.

அதைத் தொடர்ந்துபெற இயலாது.

அருள் வழிந்தோடும்.

அந்நிலையில் கொட்டாவி வரும்; அறிவு களைத்துவிடும்.

பிரிட்டிஷ் விஞ்ஞானி 2 பக்கத்திற்குமேல் படிக்கவில்லை என்றார்.

100க்கு மேற்பட்ட உலக விருதுகளைப் பெற்றவர் "அந்தப் புத்தகம் நம்மால் படிக்க முடியாது" என்றார்.

ஓரளவு ஆன்மீகஆர்வம் உள்ளே சேராமல் புத்தகத்தைத் தொட முடியாது.

படித்தால் 2 பக்கம் அல்லது 10 பக்கம் படிக்கலாம்.



புரிந்து படிப்பது அவசியம்.

புரிவது போதாது.

புரிந்தது மனத்திரையைக் கிழித்து ஆத்மானுபவமாக வேண்டும்.

**எவ்வளவு படிக்கிறோம் என்பதைவிட எப்படிப் படிக்கிறோம் என்பது முக்கியம்.**

❀ தொடர்ந்து படிப்பது, களைக்கும்வரை படிப்பது, படிப்பதில் இடைவெளி கூடாதுஎன்பது discipline கட்டுப்பாடு. அதுவே மனதில் முதலிடம் பெறவேண்டும். அது மட்டுமே இலட்சியமாக இருக்க வேண்டும். முடிந்தவரை தவறாது படிக்கவேண்டும். நேற்றைவிட இன்று சற்றுக் கூடப் படிக்கவேண்டும். *The Life Divine* படிப்பது பகவானையடைய முயலும் நிஷ்டை. படிப்பது ஜீவனில் கலந்தால் கிடைப்பது விழிப்பில் சமாதிஎன்ற உணர்வுடன் படிக்க வேண்டும்.

நான் ஆரம்பத்தில் கூறிய ஆன்மீகப் பலனை வாழ்வில் பெற்றுத்தரும் திறனுடையது இம்முறை.

இப்படிப்பு அறிவில் ஆரம்பித்து திருஷ்டியில் முடியும்.

மனம் விழிப்படைந்த பின்னரே படிக்க முடியும்.

ஆத்ம விழிப்படைந்த பின்னரே படித்தப் பலன் பெற முடியும்.

*The Life Divine* படிப்பது யோகம்.

ஜீவனோடு படிப்பதே படிப்பது.

படிப்புக்கு ஜீவன் தருவது அறிவில்லை; ஞானம்.

இப்படிப்பு ஞான சித்தியாகும்.

**31. மரணபயத்தை விலக்குவது.**

வயதான பின்னரே மரணம் நினைவு வரும்.

சௌகரியமாக வாழ்பவர்க்கு அது குறைவாக வரும்.

பிரபலமாக, அன்பான குடும்பத்தில் வெற்றிகரமான வாழ்வை நடத்துபவர்க்கு மரணம் நினைவு வாராது.

30 வயதிலும் மரணம் பயம் காட்டும் நபர்கள் உண்டு.

கடமைகள் பாக்கியாக இருந்தால், நிலையில்லாத வாழ்வை நடத்தினால், பல தில்லுமுல்லுகளால் காரியங்கள் நடந்திருந்தால், மற்றவர் இறந்து போகும் எண்ணம் மேலிட்டால் மரணம் பயம் தரும்.

பயமே சுபாவம் என்பவருக்கு எந்த வயதிலும் மரணம் பயம் காட்டும்.

இந்த பயம் உள்ளவர் இதை விலக்க முடியுமா?

அவர் அன்னையை அறியாதவரானால், அறிந்தவுடன் பயம் பெரும்பாலும் மறைந்துவிடும்.

அன்னையை அறிந்தபின் உள்ள பயம் சொல்லும் செய்தி வேறு -

இவரே இந்த பயத்தை பிடித்துக்கொண்டு விடமறுக்கிறார்என அன்னை கூறுகிறார்.

**நம்செயலை அன்னைச் செயலாக மாற்றினால் மரணபயம் குறைந்து மறையும்**.

இதற்காக நாம் படித்த முறைகளை நினைவுகூர்ந்தால் 50க்கு மேல் நினைவில் வரும்.

எந்த முறையும் முழுப்பலன் தரும்.

காணாமற்போன பொருளை நாம் தேடுவதற்குப்பதிலாக பிரார்த்தனை-யால் பெறுவது அன்னைச் செயலாக நம் செயலை மாற்றுவது.

வயிற்றுவலிக்கு 20 மாத்திரை கொடுத்தால் வலி 15 மாத்திரையில் நிற்பது, அந்த அளவு செயல் நம்மிடமிருந்து அன்னைக்கு மாறுவது.

வழக்கமாக வரும் படபடப்பு பாதி குறைவது அது போன்றது.

செயல் நம்மிடமிருந்து அன்னைக்கு மாறும்பொழுது மரணபயம் குறையும்.

தொடர்ந்து ஆர்வமாக, நம்பிக்கையுடன் நன்றியெழத் தொடர்ந்தால் பயம் போய்விடும்.

போன பயம் பின்னணியிலிருக்கும். பயம் போனால் காரியம் கூடிவரும்.

பின்னணியிலுள்ள பயமும் போனால் பயமிருந்ததே நினைவுக்கு வாராது.

காரியம் வாய்ப்பாக மாறும்.

வாய்ப்பு இனிய, பெரிய, பிரபலமான வாய்ப்பாகும்.



பயம் மறந்து, பலனும் மறந்து, எதுவும் நினைவில்லையெனில் அன்பராக மனம் மாறியதாகப் பொருள்.

## 32. சமர்ப்பணத்தை ஜீவனின் சிகரத்தில் ஏற்பது.

சமர்ப்பணமான வாழ்வைவிட ருசியானது இல்லை என்கிறார் அன்னை.

சமர்ப்பணம் உயர்ந்தது. நமக்கு சமர்ப்பணம் எது?

குழந்தைக்கு அ, ஆ, இ, ஈ என்பது படிப்பு. நமக்கு புத்தகம் படிப்பது படிப்பு.

சமர்ப்பணத்தின் எளிய உருவம் பிரச்சினை தீர்ப்பது. அதற்கு அன்னையிடம் சொல்வது சமர்ப்பணம்.

மனிதரிடம் சொல்லாதே, மதரிடம் சொல்லுஎன்பது சமர்ப்பணத்தின் ஆரம்பக் கட்டம்.

வாழ்வில் சிரமம், வாய்ப்பு, கடமை, அறிவு, உணர்வு, செயல், சிறிய சாதனை, பெரிய காரியம், யோக சாதனைஎனப் பல கட்டங்களுண்டு.

சிரமம் விலகச் செய்யும் சமர்ப்பணம் எளியது.

படிப்படியாக உயர்ந்து முடிவான கட்டத்தில் யோகசாதனைக்கு வருகிறோம்.

அங்கும் பல கட்டங்களுண்டு.

எண்ணம் ஓடுவது நிற்பது, சிந்தனை கரைவது, மனம் அழிவது, உணர்ச்சி அமைதியாவது, நினைவு குறுக்கிடாதது, செயல் முடிவது, சுபாவம் கட்டுப்படுவது, கட்டுப்பட்ட சுபாவம் கரைவது, பிறர் நினைவு தெரிவது, பிரபஞ்சம் தெரிவதுஎன சத்புருஷன் தெரிந்து, பிரம்மம் தெரியும்வரை சமர்ப்பணம் பல கட்டங்களிலுள்ளது.

நம்சமர்ப்பணம் எந்த உச்சிக்குப் போயுள்ளதுஎன நமக்குத் தெரியும்.

மழை கேட்டால் வருகிறது, பணம் கேட்டால் பலிக்கமாட்டேன் என்கிறது என்றால் சமர்ப்பணத்தின் சிகரம் நமக்குப் பணம்என்று புரிகிறது.

எண்ணத்தைச் சமர்ப்பணம் செய்தால் நிற்கிறது, எதிர்பார்ப்பு கட்டுப்பட-வில்லையெனில், அதுவே சிகரம்.

மௌனம் பலிக்கிறது, திருஷ்டி கிடைக்கவில்லை;

ஞானம் பலிக்கிறது, பிரபஞ்சம் தெரியவில்லை;

பழைய பாக்கி சமர்ப்பணத்தால் வருகிறது, மார்க்கட் விரிவது முடிய-வில்லை;

மார்க்கட் அளவுகடந்து பெருகுகிறது, இலாபம் வரவில்லை;

பணம் பிரவாகமாக வருகிறது, பிரபலம் கிட்டவில்லை;

Charles Dickens பிரபல ஆங்கில ஆசிரியர். அவர் புகழ் உச்சாணிக்-கொம்புக்குப் போனபின் David Copperfield என்ற நாவலை எழுதினார். புகழ் மேலும் உயர்ந்தது. ஆனால் புத்தகம் அந்த அளவு விற்கவில்லை.

காந்திஜீயால் குண்டர்கள் மனத்தை மாற்ற முடிந்தது, ஜின்னா மனம் மாறவில்லை;

என்மனைவி நான் கூறுவதை அப்படியே ஏற்பாள், பிள்ளைகள் சட்டை-செய்வதில்லை;

உலகமே என்பேச்சை தலைமேல் தாங்கும், கணவன் மறுப்பார்;

தியானம் சிறப்பாக இருக்கும், ஆனால் தானே வாராது;

தியானமும் என்னைத் தேடிவரும், ஆனால் புல்லாங்குழல் கேட்பதில்லை;

வேணுகானமும் கேட்கிறது, அசரீரி (inner voice) பலிப்பதில்லை;

அனைவரும் கட்டுப்படுவர்; ரிக்ஷாக்காரன் அடாவடி, கட்டுப்படுவதில்லை, என்பன நாம் அறிந்த நிலைகள்.

கட்டுப்படாதவை கட்டுப்பாட்டால் கட்டுப்படும்.

அவற்றைப் பிரச்சினை, வாழ்வு, வாய்ப்புகளிலிருந்து விலக்கி உள்ளே மௌனம், திருஷ்டி, ஞானம்என மாற்றலாம்.

மாறும் நிலைக்கு முடிவுண்டு.

மௌனம் அதுபோல் திருஷ்டியானால், ஒரு வினாடி நிலைக்கும்.

அதே கட்டத்தில் சமர்ப்பணத்தை நிறுத்த வேண்டும்.

**மீண்டும் சமர்ப்பணத்தைக் கீழே மௌனத்திற்கோ, சிந்தனைக்கோ கொண்டுவரக்கூடாது.**

இது நம்சமர்ப்பணத்தின் சிகரம்.

அதையும் எண்ணத்தால் சாதிப்பதைவிட நிஷ்டையில் சாதிக்கலாம்; ஜீவனால் அடையலாம். எண்ணம் நின்று, நிஷ்டை சமர்ப்பணத்தை ஏற்பதைக் காணலாம். நிஷ்டை அடங்கி ஜீவன் எழுந்து சமர்ப்பணத்தைத் தாங்குவதைக் காணலாம்.



**மனிதனுக்கு எண்ணம் உயர்ந்தது. தியானமெனும் நிஷ்டை எண்ணத்தைக் கடந்தது. ஜீவன் தியானத்தின் பின்னாலிருப்பது தெரியும். தியானம் மனத்தின் முயற்சி. ஜீவன் மனத்தைவிடப் பெரிய முழுமையுடையது.**

அந்த உச்சியிலேயே அதிகபட்சநேரம் இருக்க முயல்வது இம்முறை.

## 33. எதையும் செய்ய முயல்வதைத் தவிர்ப்பது.

சர்வ ஆரம்பப்பரித்தியாகி என்பது பகவான் கூறிய சொல்.

(Non-reaction) எரிச்சல்படாமலிருப்பது பெரிய கட்டுப்பாடு.

எந்த ரிஷியாவது இதில் தேறுவாராஎன்பது சந்தேகம்.

அதில் தேறுபவரும் எதையும் செய்ய முயலக்கூடாதுஎன்பதில் தேறமாட்டார்.

உடலுக்குப் பழக்கம், உணர்ச்சிக்கு ஆர்வம், அறிவுக்கு அபிப்பிராயம் உண்டு.

தாகத்திற்குத் தண்ணீர் குடிப்பது பழக்கம்; TV படம் பார்க்க ஆர்வம்; பலர் பேசும்பொழுது நம்அபிப்பிராயத்தைக் கூறுவது மனித சுபாவம்.

நம் செயல்கள் அனைத்தும் பழக்கத்தாலும், ஆர்வத்தாலும், அபிப்பிராயத்-தாலும் நடக்கின்றன. இவை நம் கட்டுப்பாட்டிலில்லை.

நம்மை நாம் கவனித்தால், காலையில் ஆபீஸ் போகவேண்டும். இது கடமை.

இது நாமே முயன்று செய்வது.

காலை 9 மணிக்குக் கிளம்பவேண்டும்.

இதைச் செய்வதைத் தவிர்ப்பது கட்டுப்பாடானால் எப்படிச் செயல்படுவது?

நாம் ஆபீஸ் போகும் பழக்கத்தைத் தவிர்த்தால் மனம் அமைதியாகும்.

உள்ளிருந்து 'ஆபீஸுக்குப் போ' என அன்னை உத்தரவளிப்பார்.

அதைக் கேட்டு ஆபீஸுக்குப் போவது அன்னை அனுமதியால் போவது.

போகாமலிருக்க முடிவு செய்தால் படபடப்பு வரும், பயம் வரும், வேலை போய்விடும்என்று தோன்றும். அதையும்மீறி பேசாமலிருந்தால் உள்ளிருந்து அன்னைகுரல் வாராது. என்ன செய்ய?

படபடப்பு அடங்கி, பயம் போகும்வரை பயிற்சி. பிறகு அமைதிவரும்.

அமைதி கனத்து, ஆழ்ந்து, செறிந்து, குரல் எழும்.

அதுவரை பேசாமலிருக்க வேண்டும்.

அது பலித்து, குரல் கேட்டு, ஆபீஸ் போனால், ஆபீஸில் பெரிய செய்தி காத்திருக்கும்.

நாமே பழக்கத்தால் ஆபீஸ் போனால், அதற்குரிய பலன் அட்டண்டன்ஸ்.

கடமையால் ஆபீஸ் போனால் திறமை வந்து, பிரமோஷன் வரும்.

ஆர்வமாக ஆபீஸ் போனால், அடுத்த டிபார்ட்மெண்டிற்கு பிரமோஷனில் மாற்றல் வரும்.

அபிப்பிராயப்படி ஆபீஸ் போனால் அதற்கேற்ற பலன் வரும்.

அமைதியாகச் செய்தால் இப்பலன்கள் அதிகமாக வரும்.

அன்னை நினைவோடு செய்தால் நெஞ்சு அன்னையால் நிறையும்.

கடமை சேவையாக மாறிச் சமர்ப்பணமாகும்.

குரல் அன்னை எழுப்பினால், அன்னையின்அருள் நம்வாழ்வில் பூர்த்தியாகும்.

குரல் ஆழத்திலிருந்து வந்தால் உலகில் அன்னையின்எண்ணம் நம் செயலால் பூர்த்தியாகும்.

பழக்கம், ஆர்வம், ஆசை, அபிப்பிராயம், வேகம் விலகுவது மனிதன் மனத்திலிருந்து விலகுவது.

மனிதன் விலகினால் மனம் உயரும்.

மனம் உயர்ந்தால் மௌனம், திருஷ்டி, ஞானம், மூலம், முனிவர், ரிஷி, யோகி, தெய்வநிலை சித்திக்கும்.

இவற்றைக் கடந்தால் சத்தியஜீவியம் பலிக்கும்.

வாழ்க்கையில் இலட்சியமில்லாவிட்டால் யோக அம்சம் பலிக்கும்.

'நான்' விலகினால் அன்னையின் கருவியாகி, அன்னையின் இலட்சியம் உலகில் நம் செயலால் பலிக்கும்.

இதுவே முடிவான discipline கட்டுப்பாடாகும்.



## 34. எரிச்சலைத் தவிர்ப்பது.

எரிச்சலைத் தவிர்க்க நினைத்தால் எரிச்சல் வரும்.

எரிச்சல் என்பது இயலாமை.

அறியாமை அறிவின் இயலாமை.

அவசரம் உணர்வின் இயலாமை.

சோம்பல் உடலின் இயலாமை.

அவற்றைத் தொட்டால் அவை பேசும் பாஷை எரிச்சல்.

**ஞானம் உணர்வை அறிவோடு உணரவைக்கும்.**

எரிச்சல் இயலாமையென மனம் அறிந்தால் எரிச்சல் குறையும்.

திறமையற்ற இடத்தில் திறமையைத் தேடினால் எரிச்சல் மறைந்து இதமான எண்ணம் தோன்றும்.

உடல்நலம் குன்றியவர்க்கு உடல் தேறினால் எரிச்சல் குறையும்.

எளிய விஷயங்களில் எரிச்சல் ஏராளமாக வரும்.

புறப்படும்பொழுது மோட்டார்பைக்கில் பெட்ரோலில்லைஎன்றால் தாள முடியாத எரிச்சல் வரும்.

**முன்யோசனை அவ்வெரிச்சலை அடியோடு அழிக்கும்.**

எரிச்சல் வழக்கமாகப் பிறர் மீது வரும்.

குறை நம்மீது இருந்தால் நிறையுடையவர் மீது எரியும்.

இயலாமையும், முன்யோசனையும் பேர் அளவுக்கு எரிச்சலை விலக்கும்.

நாம் படும் எரிச்சல் வழக்கமாகச் சில இடங்களாக இருக்கும்.

அவற்றை 'இயலாமை, முன்யோசனை, நியாயம், பொறுமை, நாகரீகம்' ஆகிய கண்ணோடு கண்டால், ஆராய்ந்தால், அறிவு வளரும். நம் அறியாமையைக் கண்டு நாமே வியக்கும்படியாகும்.

மனம் புரிந்ததை உணர்வு ஏற்றால் 100% எரிச்சல் விலக வாய்ப்புண்டு.

தொடர்ந்த பயிற்சியால் 90 பங்கு விலகும்.

பயில மறுத்தால் கொஞ்ச நாள் கழித்து மீண்டும் எரிச்சல் வரும்.

எரிச்சல் குறைந்த நாட்களில் வாழ்வு சிறந்ததை அறிய முடியும்.

**வாழ்வு சிறக்க எரிச்சலை விலக்குவது அவசியம்.**

**மனம் வளம்பெற அதைச் செய்வது மேல்.**

**ஆத்ம நலனுக்காகச் செய்வது அதிஉத்தமம்.**

எரிச்சல் - பிரச்சினை.

பொறுமை - சிக்கலற்ற வாழ்வு.

சமர்ப்பணம் எரிச்சலை அழிக்கும் ஆன்மீக முறை.

பிறர் இனிக்கப் பழகும் நாகரீகம் எரிச்சலைத் தலைகீழே மாற்றும்.

எரிச்சல் அறிவை மழுங்கச் செய்யும்.

நிதானம் தீட்சண்யம் தரும்.

"Book of Quotations" பொன்மொழிகள் நிறைந்த பல புத்தகங்கள் உள. அவற்றுள் எரிச்சலைப் பற்றிப் பெரியவர்கள் சொல்வதைப் படிப்பது உதவும்.

**சமமான திறமையுடையவருள் எரிச்சல் பேர்வழி, நிதானமானவர் எனத் தேர்ந்து, அவர்கள் வாழ்வை ஆராய்ந்தால் பலன் உண்டு.**

எரிச்சலால் கெட்டுப்போன காரியங்களை நினைவுகூறலாம்.

பொறுமையால் சாதித்தவற்றை நினைவுபடுத்திப் பார்க்கலாம்.

நாகரீகம் வேண்டும்; நலத்தை நாட வேண்டும்; நல்லவர் நட்பு தேவை-யெனில்,

**எரிச்சல் கூடாது.**

எரிச்சலுக்கு எதிரானது ஏற்றம் தரும்.

எரிச்சல் அன்னைக்குப் பிடிக்காது.

பகவானும், அன்னையும் எரிச்சல் பட்டதில்லை.

வயிறு குளிர வேண்டும்; எரியக்கூடாது.

*தொடரும்....*

❀❀❀

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: N. Asokan

## ஸ்டீவ் ஜோப் STEVE JOBS

Apple கம்பனி உலகப் பிரசித்திபெற்றது. அதன் ஸ்தாபகர் ஸ்டீவ். கம்பனி பெரியதானபின் அவரை விலக்கினர். பல ஆண்டு கழித்து மீண்டும் அவரைக் கூப்பிட்டனர்.

✡ *கம்ப்யூட்டரில் நடக்கும் பல புரட்சிகளில் அவருடையது ஒன்று.*

✡ *Steve பெயர் தெரியாதவர் கம்ப்யூட்டர் உலகிலிலில்லை.*

✡ *கள்ளம் கபடமற்ற குழந்தையுள்ளம் பெற்றதுபோன்ற இப்படிப்பட்டவர்க்கு - சாதனையாளருக்கு - அசாத்தியமான நம்பிக்கை இயல்பாக இருக்கும்.*

ஒரு சமயம் டாக்டரிடம் போனபொழுது இவருக்கு pancreasஇல் கான்சர் என்று கண்டு, 6 மாதமே உயிரோடிருக்க முடியும் என்றனர். இது பாதகமான நினைவு. இத்துடன் எப்படி வாழ்வது? அன்று மாலை biopsy செய்தனர். வாய்வழியாக குழாய் அனுப்பி குடலைச் சோதனை செய்தனர். ஒரு ஊசிமூலம் pancreasஇலிருந்து சில cells எடுத்தனர். அதை மைக்ராஸ்கோப்மூலம் பார்த்த டாக்டர் அழ ஆரம்பித்துவிட்டார். இது குணமாகும் கான்சர் என்றார். அவர்கள் முடிவு கூறிய 6 மாதம் போய் மேலும் 6 மாதமாகிறது என்றார் ஸ்டீவ்.

✡ **நம்பிக்கை மலையை நகர்த்தும்; எதையும் சாதிக்கும்.**

✡ **நமக்கு நம்பிக்கையுண்டுஎனத் தெரியாமலுமிருக்குமளவுக்குச் சாதனையாளருக்கு நம்பிக்கையிருக்கும். அது ஸ்டீவுக்கிருந்திருக்கிறது.**

✡ **பயம் வியாதியை அதிகப்படுத்தும்; இல்லாத வியாதியை உற்பத்தி செய்யும்.**

✡ **நம்பிக்கை வியாதி வருவதைத் தடுக்கும்; வந்த வியாதியைக் குணப்படுத்தும்.**

**1956 முதல் இது அதிகமாக நடக்கிறது.**

❀❀❀

## செல்வம் - பணம்

✡ **நாட்டில் சுபிட்சம் உற்பத்தியாகி, பணப்புழக்கம் வளர்வதைக் காண்கிறோம்.**

✡ **எப்படி இந்த வளர்ச்சி வருகிறதுஎன இதுவரை எவரும் விளக்கியதாகத் தெரியவில்லை.**

✡ **வளர்ச்சி மிகச்சிறியதானாலும், ஆமை நகர்ந்தால் முயலை ஜெயிக்கும்.**

✡ **பொருளாதாரரீதியில் விளங்காவிட்டாலும், அன்பர்கள் *தங்கள் அனுபவத்தை நம்பினால், மனதார ஏற்றால்,* அது விளங்கும். சிறு வளர்ச்சி, பெரு வளர்ச்சியாகும்.**

✡ **அடிப்படையில் சிருஷ்டி ஏற்பட்ட வழியும், பணம் பெருகும் சட்டமும் ஒன்றே.**

✡ **தம் சொந்த வாழ்வில் பணம் உபரியாகப் பெருகிய நேரம் மனம் எப்படியிருந்ததுஎன அன்பர் நினைவுகூர்ந்தால், மனம் மலரும் பொழுது பணம் பெருகுகிறதுஎனத் தெரியும். அதனால் பணம் எந்த அளவு பெருகவேண்டுமோ அந்த அளவுக்கு மனம் மலர்வது அவசியம்என்பது தெளிவு. இது புரியாமல் ஏற்பது.**

✡ **புரிவதுஎன்பது பொருளாதாரரீதியில் பணப்பெருக்கம் சட்டமாகப் புரிவது.**

✡ **தெளிவாகப் புரிந்து, முழுமையாக ஏற்றால், மலரும் மனம், பெருகும் பணம்எனக் காணலாம்.**

✡ **புரியாமல் மனம் மலர்ந்தாலும், பலன் அபரிமிதமாக இருக்கும்.**

✡ **புரியும்படி எழுதிய கட்டுரை ஆங்கிலத்தில் நூலாக வெளிவர இருக்கிறது. சாரம் தெளிவாக இருந்தாலும் மேல்நாட்டார் மனநிலை ஏற்குமாறு அதை எழுத நாளாகும். அதன்பின் தமிழன்பர்கள் சூழ்நிலை ஆமோதிக்கும்படியும் மனநிலை மகிழ்வோடு ஏற்கும்படியும் எழுத மேலும் கொஞ்ச நாளாகும். அதுவும் நூலாக அப்பொழுது வெளிவரும்.**

✡ **அந்நூல்கள் வெளிவரும்வரை, தற்காலிகமாக, அன்பர்கள் மனத்தை சற்று (1% - 5%) எந்த வகையில் உயர்த்தினாலும் - மெய், நிதானம், பொறுமை, நல்லெண்ணம், பொறுப்பு - அந்த அளவு வரவு உயர்வதைக் காணலாம். இது ஆன்மீக சக்திஎன்பதால் 1% உயர்ந்த தூய்மைக்கு 10% வரவு உயர்வது அதே சமயம் நடக்கும். சிறு உயர்வை பேர் உயர்வாக மாற்றலாம் (1% முதல் 95% அல்லது 99%). 100% தூய்மை என்ற எல்லைக்கு வரும்பொழுது மனம் பழைய நிலையை விரும்புமேதவிர புதிய ஆன்மீக சுபிட்சத்தை ஏற்க மறுக்கும். மறுக்காதவர் அருளுக்குரிய அன்பர். மறுப்பவரும் பெறுவது பெறற்கரிய பேறு.**

❀❀❀